
# Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு 15 தொகுதி 1 ஜனவரி - மார்ச் 2025


**R 5555**

## அன்பின் இராஜரீகப் பிரமாணம்

## THE ROYAL LAW OF LOVE

**“அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும். நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மை உண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன். கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடக்கவில்லையே”–ரோமர்15:1–3.**

தேவனுடைய பிள்ளைகளாக நம்மில் ஒவ்வொருவரும் கிறிஸ்துவில் உள்ள நம் சுயாதீனத்தினால் மற்றவர்கள் காயப்படாமல் இருக்க கவனமாய் இருக்கவேண்டும். ஏனெனில் இது அன்பின் பிரமாணத்தால் கடிந்து கொள்ளப்படும். இந்தக் கருத்தை ரோமாபுரியில் உள்ள சபைக்கு எழுதின நிருபத்தில் அப்போஸ்தலர் தெளிவாக வலியுறுத்துகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் ஒரே மாதிரி “விசுவாசத்தில் பலமுள்ளவர்களாக” இல்லை என்பதை அவர் குறிப்பிடுகிறார். விசுவாசத்தில் பலவீனமாயுள்ள சிலரால், இயேசு நம் மீட்பராக இருக்கிறார் என்பதை பார்க்க முடிந்தாலும், புத்திரர்களாக கிறிஸ்துவில் பெற்றுள்ள சுயாதீனத்தை இன்னும் உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஒருவர் தன்னுடன் ஒத்துப்போகிற எதையும் உண்பதற்கு சுயாதீனம் இருக்கிறதை உணர்ந்துகொள்கிறார். அதேசமயம் பலவீனமாக இருக்கிற மற்றொருவர், சில பிரமாணத்தை மீறாதபடிக்கு தன்னில்தானே சிந்தித்து, காய்கறிகளை மட்டும் உண்கிறார். சில கிறிஸ்தவர்கள், நம் கர்த்தர் மாமிசம் உண்டதை மறந்துவிட்டு, மாம்சம் சாப்பிடுகிற சகோதரர்களைக் கண்டிக்கின்றனர். மனசாட்சியின் முழு சுயாதீனத்தை மற்ற ஒவ்வொருவருக்கும் கொடுக்க நாம் கற்கவேண்டும். பலமுள்ளவர் பலவீனரை இழிவாகக் கருதக்கூடாது, பலவீனமானவர்கள் தங்களைக் கொண்டு மற்றவர்களை நியாயந்தீர்க்கவும் கூடாது. தேவன் நம்மைப்போலவே மற்றவர்களையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார். அவருடைய ஊழியத்தில் அவர்களை ஆசீர்வதித்ததன் மூலம் தம் ஏற்றுக்கொள்ளுதலை வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதை அறிந்துகொள்வதே நம்மில் ஒவ்வொருவருக்கும் போதுமானதாக இருக்கவேண்டும்.

நாட்களைக் கடைப்பிடிப்பது குறித்தும் இதுபோன்றே இருக்கிறது. அப்போஸ்தலர் கூறுவதைப்போல ஒருவர் ஒரு நாளை மற்றவைகளுக்கும் மேலாக (விசேஷமாக) மதிப்பிடுகிறார். அதே சமயம் மற்றொருவர் ஒவ்வொரு நாளையும் ஒரே மாதிரியாகவே மதிப்பிடுகிறார். ஒவ்வொருவரும் தனது சொந்த மனதின் உறுதியை முழுமையாக நிறைவேற்றட்டும். அதாவது தனக்கான தேவனுடைய சித்தமாக இருக்கும் என்று அவன் நம்புகிற எதுவாயினும் அதை செயல்படுத்தட்டும். “அவனவன் தன் தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாய் இருக்கவேண்டும்” என்று அப்.பவுல் வலியுறுத்தும்போது, தேவனுடைய பிள்ளைகள் எல்லோருக்குமான அவருடைய சித்தம் என்ன என்பதை மனதில் தீர்மானிக்கவேண்டும் என்பதையும், அப்படியானால் சரியோ தவறோ அவரது கருத்தைப் பற்றிநிற்க சகோதரர்களின் கருத்தை கேட்பதற்கோ அல்லது சிந்திப்பதற்கோ விருப்பமற்றவர்களாக இருக்கவேண்டும் என்பதையும் அவர் அர்த்தப்படுத்தவில்லை. அதற்கு மாறாக, கிறிஸ்துவின் முழு சுயாதீனத்திற்குள்ளான வளர்ச்சியை வலியுறுத்தி, பலவீனர்களுக்கு பலமுள்ளவர்களின் தரப்பில் காண்பிக்கவேண்டிய பொறுமை மற்றும் அக்கறையைக் குறித்து ஆலோசனை கூறுகிறார். அவர் பலமுள்ளவர்களை அங்கீகரித்து, மாம்சம் உண்ணுதல், ஓய்வுநாளை கடைப்பிடித்தல் போன்றவற்றில் தங்களையே அடிமையாக நினைக்கிற சகோதரரை பலவீனமானவர் என்று தெளிவாகக் கூறுகிறார்.

## இம்மாத வெளியீட்டில்


.. **அன்பின் இராஜரீகப் பிரமாணம் ... *1***

.. **நீதியின் ஆளுகைக்குத் தயாராகுதல்... *6***



*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

**பலவீனருக்கான அன்பு மற்றும் அக்கறை**

இருப்பினும், பலவீனமான சகோதரர் பிரமாணத்தை கடைப்பிடிப்பதற்கும் இவ்வாறு தேவனுக்கு முன்பாக தன்னைத்தானே நீதிமானாக்கிக் கொள்வதற்கும், கிறிஸ்துவின் மீட்பின் வழியை புறக்கணிக்கிறதற்குமான ஒரு முயற்சியாக இல்லாமல், மாறாக அப்படிப்பட்ட சடங்குகள் மற்றும் பழக்கவழக்கங்கள் அல்லது அமைப்பு விதிகளினால் தான் கட்டுண்டவனாக இருக்கவேண்டும் என்று நம்மை மீட்பர் விரும்புகிறார் என்று நினைப்பதன் காரணத்தினால், அப்படிப்பட்ட ஒரு அடிமைத்தனத்தை உற்று நோக்கினால், அப்போது பலமுள்ள ஒருவர் அவருடைய மனசாட்சி சார்ந்த பலவீனத்தில் தொடர்வதற்கோ அல்லது அதை வெளிச்சம்–போட்டுக் காட்டவோ, அதை சாதாரணமாக்கவோ கூடாது. மாறாக அவரை ஒரு சகோதரனாக ஏற்றுக்கொண்டு , ஒழுங்குமுறையிலும் அனுபவத்திலும், கிருபையிலும் அறிவிலும் வளருதல் ஆகியவை மற்ற சகோதரர்கள் மிக விரைவாக அடைந்த அந்த சுயாதீனத்திற்கு அவரை படிப்படியாக கொண்டுவரும் என்று நம்பவேண்டும் என அப்போஸ்தலர் அறிவுரை கூறுகிறார்.

மாம்சம் புசிக்கிறதும் மதுபானம் பண்ணுகிறதும் மற்றெதையாகிலும் செய்கிறதும் உன் சகோதரன் இடறுகிறதற்காவது தவறுகிறதற்காவது பலவீனப்–படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால் அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாய் இருக்கும் (ரோமர்14: 21) என்ற அப்போஸ்தலருடைய அறிக்கையிலுள்ள ஆவிக்குள் முழுமையாக நுழைந்திருக்கிற பலம் உள்ளவர்கள், அவர்களுடைய மனசாட்சி அனுமதித்ததை அவர்களே மறுத்து, மாபெரும் ஆசீர்வாதத்தை பெறுகிறார்கள். கிறிஸ்துவும் தமக்குப் பிரியமாய் நடக்கவில்லை என்ற போதகரின் அடிச்சுவடுகளை அவர்கள் பின்பற்றுகிறார்கள் என்பதை கூடுதலான அளவில் அவர்களால் உணரமுடியும். ஆனால் பரிகாசத்தினாலும் செல்வாக்கு செலுத்துவதினாலும், பலமுள்ள சகோதரர் உணர்ந்துகொள்ளாத ஒரு சுயாதீனத்தை பயன்படுத்துவதற்கு அவரை பலவந்தப்படுத்த முயற்சிப்பாரானால் அது அவர்களை பாவத்துக்குள்ளாகும்படி கட்டாயப்படுத்தும். எனவே பலவீனமான சகோதரர்களை அவர்களுடைய மனசாட்சிகளின் சுயாதீனத்திற்கே விட்டுவிடவேண்டும். கிறிஸ்துவுக்குள் விடுதலைபெற்ற மனிதர்களாக அவர்களின் முழு சிலாக்கியங்கள் பற்றி புரிந்துகொள்வதற்கு அவர்களை படிப்படியாக பயிற்றுவிக்கிறதின் நம்பிக்கையில், அன்பு மற்றும் சத்தியத்தின் செல்வாக்குகள் மாத்திரமே தாங்கும்படி அவர்கள் மீது கொண்டுவரப்படவேண்டும்.

தேவனுடைய வார்த்தையின்மீது உணவு ஊட்டுவதால் குழந்தைப் பருவத்தின் பலவீனத்திலிருந்து பூரண புருஷனுக்குரிய பலத்துக்கு முடிந்தஅளவு சீக்கிரமாக வளர்ச்சியடையவும், ஒவ்வொருவரும் கிருபையிலும் அறிவிலும் வளருவதற்கும் தேடுகிறார்கள். ஒவ்வொரு அங்கத்தினரும் கர்த்தருடைய சித்தத்தைக் குறித்து தங்கள் சொந்த மனதின் உறுதிப்பாடுகளைநிறைவேற்றுகிறார்கள்.இவ்வாறுகிறிஸ்துவின் சரீரம் அன்பு மற்றும் ஒற்றுமையில் நிறைந்திருக்கும்.

குறிப்பாக நாட்களைப் பார்ப்பது, வளர்ச்சியின் ஒரு குறைபாடாக அப்போஸ்தலர் குறிப்பிட்டு, ''நாட்களையும் மாதங்களையும் காலங்களையும் வருஷங்களையும் பார்க்கிறீர்களே. நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப் போயிற்றோ என்று உங்களைக் குறித்து கவலையாய் இருக்கிறேன்'' என்று கூறுகிறார் (கலாத் 4 :10,11). தேவனுடைய புத்திரர்களின் சுயாதீனத்தை ஒருமுறை அறிந்திருந்து, ஆனால் தவறான போதனையின்மூலம் மறுபடியும் அடிமைத்–தனத்துக்குள் இப்போது போயிருக்கிறவர்களை இங்கு அவர் முகவரியிட்டுக் கூறுகிறார். அவர்கள் தேவனுடைய புத்திரர்களின் சுயாதீனத்தில் வளரவில்லை, மாறாக பணிவிடைக்காரர் நிலைமையை நோக்கி பின்செல்லுகிறார்கள் என்பதை ஒரு சாட்சியமாக அவர்களைக்குறித்து அப்.பவுல் உணர்ந்திருக்கிறார். மேலும் இந்த புத்திரருக்குரிய சுயாதீனத்தைக் காத்துக்கொள்வதில் பலவீனம் மற்றும் தோல்வியடைதல் ஆகியவை – கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக தம்மையே ஒப்புக்கொடுத்தார் என்ற இந்த சுவிசேஷத்தை மறுப்பதற்கும், நியாயப்பிரமாணத்தை அவர்கள் கடைப்பிடித்தால் கிறிஸ்து அவர்களை இரட்சிப்பார் என்ற ஒரு நம்பிக்கையற்ற மாற்றுப்பொருளை சுவிசேஷமாக ஏற்றுக்கொள்வதற்கும்கூட அவர்களை வழிநடத்தக்கூடும் என்று அவர் பயந்திருந்தார்.

ஆனால் தேவனுடைய புத்திரர்களில் சுயாதீனமே மகிமை நிறைந்ததாய் இருக்கிறது. அதன் முழுமையில் அதை நாம் கிரகித்துக்கொள்ள கர்த்தர் நமக்கு உதவுவதால் நிலைத்து நிற்போமாக. இருப்பினும் அதே நேரத்தில், கிறிஸ்துவில் நாம் பெற்றுள்ள ஆசீர்வதிக்கப்பட்ட நிலைப்பாட்டின் பரந்த விரிவான பார்வையை பெறக்கூடிய உயர்ந்த நிலையை இன்னும் அடையாதவர்களுக்கு அனுதாபத்தையும் அன்பையும் விரிவுபடுத்துவோமாக. இவ்வாறாக பலவீனமான சகோதரர்களின் பலவீனங்களை, வழியில் நடக்கும் நம்முடைய கூட்டாளிகளை நாம் தாங்குகிறோம். இப்படியாக நாம் அன்பின் பிரமாணத்தோடு இசைவில் இருக்கிறோம்.

**சுய தியாகத்தின் அழகு**

சுயநலம் என்பது இந்த உலகின் ஆதிக்கம் செலுத்துகிற கொள்கையாக இருக்கிறது என்ற கருத்தை அப்போஸ்தலர் நம் கவனத்திற்கு கொண்டுவருவதாக தெரிகிறது. ஜனங்கள் பொதுவாக அடிக்கடி அநீதியாகவும் சில சமயங்களில் நீதியாகவும் தங்களையே பிரியப்படுத்தத் தேடுகிறார்கள், ஆனால் மற்றவர்களை வெறுமனே புறக்கணிக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் ஒரு வித்தியாசமான வழிமுறையை எடுக்கவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டுகிறார். நாம் கிறிஸ்துவின் கொடியின் கீழ்,

அதாவது அன்பின் கொடியின் கீழ் சேர்க்கப்பட்டிருக்கிறோம். நாம் உறுப்பினவர்களாயிருக்கிற இந்த புதிய முறைமைக்குரிய விதிமுறைகளை நன்றாக நோக்கிப் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். கிறிஸ்துவின் பின்னடியார்கள் தங்கள் சொந்த சுயநல விருப்பங்களை தேடுவதற்கு பதிலாக, மற்றவர்களின் நலன்களை நோக்கிப் பார்க்கவேண்டும். தங்கள் சொந்த சந்தோஷத்தை தேடுவதற்கு பதிலாக மற்றவர்களின் சந்தோஷத்தை , அது நம்முடைய உடன்படிக்கையின் பொருத்தனையோடு எங்கு முரண்படாதிருக்கிறதோ, அங்கு மற்றவர்களின் சந்தோஷத்தைத் தேடவேண்டும்.

கிறிஸ்துவின் சீஷர்கள் தங்கள் சொந்த துயரத்தையே தேடவேண்டும் என்பதை இது அர்த்தப்படுத்தவில்லை. மாறாக, தங்களைக்காட்டிலும் மற்றவர்களை பிரியப்படுத்துவதற்கு நேரத்தையும் சிந்தையையும் கொடுக்கவேண்டும். "கிறிஸ்துவும் தம்மையே பிரியப்படுத்த நாடவில்லை". இதுவே நம்முடைய தலைவரும் மாதிரியுமானவர் நமக்கு முன் அமைத்திருக்கிற முன்மாதிரி என்று அப்போஸ்தலர் நமக்குக் கூறுகிறார். அவர் தன் சொந்த மாம்சத்தை பிரியப்படுத்துகிற காரியங்களைச் செய்ய நாடுவதற்கு அவர் இந்த உலகத்தில் இருக்கவில்லை. அதற்கு நேர் எதிராக, மனுக்குலத்தின் அனுகூலத்திற்காக தன்னுடைய சொந்த மாம்சப்பிரகாரமான விருப்பங்களையும், மன மகிழ்ச்சியையும் நிராகரித்தார். எனவே அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கு நாம் முயற்சிசெய்கிறபோது, அதைச் செய்ய உடன்படிக்கை செய்கிறோம். சுயத்தை வெறுத்தல், சிலுவையை எடுத்தல் என்பது சுயசித்தத்தை நிராகரித்து, தெய்வீக மாதிரி மற்றும் தெய்வீகத்திட்டத்துடன் இசைவில் இருக்கிற ஒரு சுயநலமற்ற ஜீவியத்திற்கு வழிநடத்துகிறது என்பதை அர்த்தப்படுத்துகிறது.

**நெருங்கிய உணர்வில் நம் சகோதரர்களும் நம் அயலார்களும்**

அப்போஸ்தலர்களது வார்த்தைகளின் மீதான இந்த வெளிச்சத்துடன், அப்.பவுலினால் பயன்படுத்தப்பட்ட "பிறர்" என்ற வார்த்தையின் முதன்மை அர்த்தம் , நம்மோடு நெருங்கியிருப்பவர்கள் என்பதே நம் கருத்தாய் இருக்கிறது. அதாவது கிறிஸ்துவின் சபையில் நம்முடைய சகோதரர்கள் நம்முடைய "பிறராக" இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் நம்முடைய சொந்த மட்டத்தில்(they are on our own plane) இருக்கிறார்கள். அவர்களைக் கட்டியெழுப்புவதில் அவர்களை பிரியப்படுத்த நாம் விசேஷமாக தேடவேண்டும். நாம் அவர்களை மாம்சத்தின்படி பிரியப்படுத்துவதை இது அர்த்தப்படுத்துவ–தில்லை. இப்படிச்செய்வது அநேக சந்தர்ப்பங்களில் அவர்களின் கட்டி எழுப்புதலுக்கு முற்றிலும் நேர்மாறாக இருக்கும். நாம் சகோதரர்களை சரியாக பிரியப்படுத்தவேண்டுமானால், அவர்களின் உண்மையான மனதை ஆவிக்குரிய மனதை, அன்பு மற்றும் விசுவாசம் மற்றும் வைராக்கியத்திற்காகவும் எழுப்பவேண்டும். பிரியப்படுத்துதல் என்ற வார்த்தை இங்கு ஒரு வரையறுக்கப்பட்ட உணர்வில் பயன்படுத்தப்பட்டிருக்கிறதை

இது சுட்டிக்காட்டுகிறது. எல்லா ஜனங்களையும் பிரியப்படுத்துவது நமக்கு இயலாததாய் இருக்கிறது. நாம் பெற்றிருக்கிற வாய்ப்புக்கேற்ப அவர்களின் நன்மைக்காக நம்முடைய ஆற்றல்களின் இயக்கம் இருக்கவேண்டும். அவர்கள் பரிசுத்தவான்களாக இல்லாவிட்டாலும் இயன்றவரை "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும்" அவர்களை ஏவ வேண்டும் தூண்டவேண்டும் –கிளர்ச்சியுறச் செய்யவேண்டும். கோபத்திற்கோ அல்லது வன்மத்திற்கோ அல்லது பாவத்துக்கோ அல்லது மற்ற எந்த தகுதியற்ற காரியத்திற்கோ அல்ல, ஜனங்களை கட்டியெழுப்புவதற்கு அவர்களை பிரியப்படுத்துவதில் நாம் எப்போதும் வெற்றி பெறுகிறவர்களாக இல்லாமல் இருக்கலாம். அவர்களுக்கு ஊழியம் செய்வதற்கான நம்முடைய முயற்சிகளில் சகோதரர்கள் பிரியப்படுவதற்கு பதிலாக வேதனைப்பட்டதாக உணரும் தருணங்களும்கூட இருக்கலாம். இருப்பினும் கட்டியெழுப்பப்படுதலுக்காக அவர்களைப் பிரியப்படுத்த நாம் தேடுவோமானால், தெளிந்த புத்தியின் ஆவியை செயல்படுத்த முயற்சி செய்தால் நம்முடைய வழிமுறையானது மற்றவர்களின் அங்கீகாரத்தை பெற்றாலும் பெறாவிட்டாலும், கர்த்தருடைய அங்கீகாரத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற்றிருக்கும்.

எனவே "நம்மில் ஒவ்வொருவரும் பிறருடைய பக்திவிருத்திக்கு ஏதுவான நன்மை உண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்க" பெருமுயற்சி செய்வோமாக. அண்டை அயலகத்தைப் பற்றிய இந்தக் காரியம், அருகில் இருப்பதன் நிலைமை சபைக்கு அடுத்து, நம்முடைய சொந்த குடும்பங்களுக்குள் நீளுகிறது. நிச்சயமாக நம்முடைய குடும்பமே பூமிக்குரிய கடமைகள் மற்றும் உலகியல் தேவைகளைப் பொறுத்தவரை முதல் உரிமை பெறுகிறதாக இருக்கும். அவர்களே மாம்சத்தின்படி நம்முடைய அயலாராகவும் மிகவும் நெருக்கமானவர்களாகவும் இருப்பார்கள். அவர்களின் கட்டியெழுப்புதலுக்காக நாம் அவர்களை பிரியப்படுத்தத் தேடவேண்டும். இதே கொள்கை நாம் உடனடியாக காணமுடிகிற இறைச்சிக் கடைக்காரர், ரொட்டி விற்பவர், ஐஸ் விற்பவர் மற்றும் பலரிடத்திலும் நீட்டிக்கப்படும். அவர்களுடைய காயத்தில் அவர்களில் எவரையும் நாம் பிரியப்படுத்தக்கூடாது அல்லது அது எந்த வழியிலும் அவர்களுடைய கட்டி எழுப்புதலுக்காக இருக்காது. நாம் உலகத்தின் வழிமுறைகளுக்கு இறங்கிப் போகக்கூடாது. நன்மையில்லாததும் தூய்மையில்லாததுமான புனைக் கதைகளை சொல்வதற்கு அவர்கள் விரும்பினால் நாம் அவர்களுடன் கலந்துகொள்ளக்கூடாது. உண்மையாக இருக்கிறவைகள் மூலம் அவர்களைப் பிரியப்படுத்த முடியவில்லையென்றால், நாம் தேவையற்ற தொடர்பை தவிர்க்கவேண்டும். நாம் நன்மை செய்யவும் நல்லொழுக்கத்தை போதிக்கவும் மட்டுமே செய்யவேண்டும்.

**உலகம் நன்மையை அங்கீகரிக்கிறது**

நம்முடைய அயலார் எல்லாரையும் இயன்றவரை

**உலகம் நன்மையை அங்கீகரிக்கிறது**

நம்முடைய அயலார் எல்லாரையும் இயன்றவரை பிரியப்படுத்த முயற்சிசெய்யவேண்டும். நாம் மூர்க்கமான வழியில் கடிந்துரைத்தால் அது அவர்களை பிரியப்படுத்துவதாக இருக்காது, அவர்களை கட்டியெழுப்புவதாகவும் இருக்காது. மிகவும் உலகப்பிரகாரமாக இருக்கிற ஜனங்களுக்கும்கூட நாம் முறையாக கண்டிக்கக்கூடிய வழி ஒன்று இருக்கிறது. இந்த உலகம் அவர்கள் ஒப்புக்கொள்வதற்கு விரும்புவதைவிட, உயர்ந்த ஒழுக்கநீதியான மதநீதியான தரநிலையைப் பெற்றிருக்கிறது. அவர்கள் வெளிப்படையாக ஏளனமாக இகழ்ந்தாலும்கூட அவர்களது இருதயங்களில் நன்மையான–வைகளையே அங்கீகரிக்கிறார்கள். தங்கள் சொந்த வாழ்க்கையில் தூய்மையற்று இருக்கிறவர்களும் தூய்மையான சமுதாயத்தை விரும்புவதை நாம் அநேக சமயங்களில் பார்க்கிறோம். தங்களைத்தாங்களே கறைப்படுத்தி இருந்தாலும் அவர்கள் நன்மையைப் பற்றின சில மதிப்பீட்டைக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எதைத் தொட்டாலும் அது கறைப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

உலகப்பிரகாரமான ஜனங்களுக்கு தற்காலத்தில் ஒரு பெரிய அளவில் நாம் நன்மை செய்யமுடியும் – குறைந்தபட்சம் அந்த அளவிலான பலன் பொதுவாக வெளிப்படுத்தப்படும் என்று நாம் எதிர்பார்ப்பது நமக்கு முறையானதாக இருக்காது. தேவனுக்கும் சத்தியம் அனுமதிப்பதற்கும் முடிந்தவரை உண்மையாய் இருந்து, கூடுமானவரைக்கும் பிரியப்படுத்துவதே நம் குறிக்கோளாக எப்போதும் இருக்கவேண்டும். நாம் எப்போதும் சண்டையுடன் உலகத்திற்குள் செல்கின்ற முரட்டுத்தனமான வகையினராக இருக்கவேண்டாம். அதற்கு பதிலாக "நம்முடைய நற்கிரியைகளைப் பார்த்து சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி" நம் வெளிச்சம் பிரகாசிக்கும்படி செய்யவேண்டும். சத்தியத்தின் வல்லமையினால் இப்போது இனிமையான அன்பான ஆவியை உலகத்திற்கு நாம் கொடுக்கமுடியும் என்பதே மிகச்சிறந்த பரிந்துரையாக இருக்கிறது. கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரிடத்திலும் – விசேஷமாக தேவனுடைய சபையில், அதோடு நம்முடன் தொடர்புகொள்கிற எல்லாருடனும் அன்பை பகிர்ந்தளிக்கிறவர்களாக இருக்கவேண்டும்.

**எச்சரிப்பின் வார்த்தை**

சத்தியத்துடன் இசைவில் இல்லாத அல்லது ஒருவேளை ஓரளவு இசைவாயிருந்து, கர்த்தருக்கு தம்மை முழுவதும் அர்ப்பணிக்காத கணவனையோ அல்லது மனைவியையோ உடைய கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் தவறு செய்து, தங்கள் முன்மாதிரிகை ஒருவேளை தங்கள் துணையின் நலனின் முன்னேற்றத்தை தடுக்குமோ என நாம் பயப்படுகிறோம் என்று இங்கு கூறுகிறோம். உதாரணமாக, ஒரு கணவன் முழு அர்ப்பணிப்பு செய்திருந்து, அவர் மனைவி அப்படி செய்யாதவராக இருந்தால், சத்தியத்திற்கான அவரது வைராக்கியம், மனைவி அழுத்துகிற வீட்டு பராமரிப்பு போன்ற சுமைகளை தாங்குவதற்கு உதவிசெய்வதில், தனது கடமையைப் புறக்கணிப்பதற்கு வழிநடத்தாதபடிக்கு அந்த கணவன் மிகுந்த அக்கறையை பயிற்சி செய்யவேண்டும். அவரது மனைவியினுடைய உண்மையான தேவைகள் அல்லது வசதிகளுக்கு ஊழியம்செய்வதில் அவர் ஒரு விசேஷித்த கடமைப்பட்டிருக்கிறார் என்ற உண்மையை அவர் கவனிக்கத் தவறுவதற்கு அவரை இயக்கும்படி, தன்னார்வ வேலைகள் சபைகூடுகைகள் அவருடைய உபரி நேரத்தை அதிகமாக நிரப்பக்கூடாது.

கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணிப்பு அறிக்கை செய்திருக்கிற கூட்டாளியின் தரப்பில், அன்பிலும் அக்கறையோடு கவனிப்பதிலும் குறைவுபடுவதனால் சத்தியத்தை முழுமையாக ஏற்றுக்கொள்வதிலிருந்து சிலர் கசப்பூட்டப்பட்டு, தடைசெய்யப்பட்டிருக்கிறார்கள் அல்லது அவர்கள் எதிர்க்கும்படி வழிநடத்தப்படுவார்கள் என்று நாம் அஞ்சுகிறோம். நாம் உண்மையில் முழுவதுமாக கர்த்தருடையவர்களாக இருக்கிறோமென்றால், அதை நிரூபிக்கவேண்டிய முதல் இடம் நம் வீடாக இருக்கிறது. நம்முடைய வீடுகளுக்கு வெளியே சத்தியத்தின் ஊழியத்திற்கான எந்த அளவிலான வைராக்கியமும் நம் குடும்பங்களுக்கு நாம் கடமைப்பட்டிருக்கிற, அவர்கள் எதிர்பார்ப்பிற்கு உரிமைபெற்றுள்ள கடமைகளிலிருந்து நம்மை விடுவிக்காது. நம் கடமைகளை நிறைவேற்றுவதே சத்தியத்திற்கான உண்மையான ஊழியமாகவும், பலசமயங்களில் மிகவும் பயனுள்ள ஒன்றாகவும் இருக்கிறது. தண்ணீர் அல்லது கரி அல்லது மரக்கட்டை சுமந்துசெல்வது அல்லது ஒரு கணவன் தன் மனைவிக்கு வழங்கவேண்டிய அல்லது வழங்கக்கூடிய மற்ற உண்மையான சேவைகள் இருக்குமானால் , அவைகள் மற்ற எந்த சேவைக்காகவும் புறக்கணிக்கப்படக்கூடாது. அவள் சில கூடுமைகளில் கலந்து கொள்ளவிருப்பமாயிருந்தால், அவளுடைய தோழமையை மதித்துணர்வதையும், அவள் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியையும் அவர் காண்பிக்கட்டும்.

இதே விதி அர்ப்பணிக்கப்பட்ட மனைவிக்கும் பொருந்துகிறது. சிலநேரம் மற்றும் சில தனிப்பட்ட சேவை, கணவனின் நியாயமான தேவைகளாக இருக்கிறது. இந்த வழிகளில், நீதியின் ஆவியையும், அன்பின் ஆவியையும், தெளிந்தபுத்தியின் ஆவியையும் அந்த மனைவி பயிற்சி செய்யவேண்டும். மேலும் மனைவியின் புதிய நலன்களின் காரணத்தினால் அவன் மறக்கப்பட்டான், அன்பு கூறப்படவில்லை, கவனிக்கப்படவில்லை என்று கணவன் உணர்வதற்கு காரணமாக அவள் இருக்கக்கூடாது. வீட்டின் முழு உரிமைபெற்ற தலைவனாக கணவன் இருக்கிறான். தேவனுடைய ஒவ்வொரு பிள்ளைக்கும் கடமைகளாக இருக்கிற வேலைகள் இருக்கிறது. அவற்றை புறக்கணிப்பது அல்லது மறுப்பது கணக்கிடமுடியாத தீங்கை விளைவிக்கிறதாக இருக்கும். நாம் கர்த்தருக்கு நம்மை அர்ப்பணித்திருக்கிறபோது, ஒரு கணவராக ஒரு மனைவியாக அல்லது பெற்றோராக அல்லது குழந்தையாக இவர்களின் உண்மையான கடமைகள்

ஒருபோதும் ரத்து செய்யப்படக்கூடாது. அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொரு பரிசுத்தவானும், ஜெபத்தினாலும் வார்த்தையை கற்பதனாலும், நம் வாழ்வின் தெய்வீக ஏற்பாடுகளினாலும் நம்மைப்பற்றிய கர்த்தருடைய சித்தத்தை உணர்ந்துகொள்ளத் தேடவேண்டும். அதனால் நாம் நம் தேவனை மகிமைப்படுத்துகிற ''நடமாடும் நிருபங்களாக'' இருக்கமுடியும். மேலும் அவர் நிமித்தமாகவோ அல்லது நம்முடைய சொந்த கிறிஸ்தவ வாழ்க்கைத்தொழிலின் மீதும் கண்டனத்தை கொண்டுவராமல் இருக்கமுடியும்.

**பலிசெலுத்துதலே நம்முடைய விசேஷித்த பணி**

இந்த தற்காலத்தில் நம்முடைய அலுவல், நம்முடைய வாழ்க்கைத்தொழில், நம்முடைய அழைப்பின் விசேஷப் பணி தியாகம் செய்தல் அல்லது பலிசெலுத்துதல் என்பதை ராஜரீக ஆசாரியத்துவத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் நினைவில் கொள்ளவேண்டும். கர்த்தருடைய ஜனங்களால் அடிக்கடி உணர்ந்துகொள்ள முடியாத ஊழியத்தின் ஒரு வடிவம் என்னவென்றால், நம்முடைய சொந்த விருப்பங்கள் அல்லது திட்டங்களை, நம்முடைய சொந்த வழிமுறைகளை, அல்லது முன்னுரிமைகளை, அதாவது அது தனிப்பட்ட முன்னுரிமையின் விஷயமாக மாத்திரம் இருக்கும்போது அவற்றை நிராகரித்துவிட்டு, அதற்கு பதிலாக மற்றவர்களின் திட்டங்களை விருப்பங்களை முன்னுரிமைகளை சமாதானத்தின் நலன்களுக்காக ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பாக இருக்கிறது. காரியத்தை ஒரு வழியிலோ அல்லது மற்றொரு வழியிலோ பெறுவதில் கர்த்தர் மிகவும் பிரியப்படுவதாக நாம் நம்புகிற இடத்தில், நம்முடைய சொந்த விருப்பங்களை நிறைவேற்றுவது பெரும்பாலும் ஒரு ஆசீர்வாதத்தை நிரூபிக்கிறது. அதாவது அன்பையும் அக்கறையையும் வழங்குகிறவருக்கும், அதைப் பெறுகிறவருக்குமாகிய இருவருக்குமே அது ஒரு ஆசீர்வாதத்தை நிரூபிக்கிறது. இதுவே அன்பின் ஆவி எஜமானரின் ஆவி.

கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள வேறுபட்ட அங்கத்தினர்கள் தாங்கள் மரபுரிமையாகப்பெற்ற பல்வேறு பலவீனங்களை உடையவர்களாயிருந்து, அவைகளுக்கெதிராக வாழ்நாள் முழுவதுமான ஒரு போராட்டத்தை அவர்கள் கூலியாக தரவேண்டும். மேலும் இந்த பலவீனங்கள் சில சமயங்களில் மற்றவர்களுடைய வசதிகளில் ஓரளவு தலையிடும் வகையிலும், அதேபோல் தங்களுக்குள்ளும் இருக்கிறது. இங்கு அப்போஸ்தலர் ''பலமுள்ளவர்களாகிய நாம் பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்'' என்ற ஆலோசனையான வார்த்தையை வழங்குகிறார். அப்படிப்பட்ட ஒருவரிடத்தில் நட்பு ரீதியில் வெளிப்படுத்தி, அவருடைய குறைபாட்டிலிருந்து விடுபட அவருக்கு உதவ முயற்சிசெய்ய வேண்டும் என்றும் இது சுட்டிக்காட்டுகிறது. நம்முடைய பொறுமைக்கான சோதனையை தாழ்மையுடன் தாங்கிக்கொண்டு, சாந்தம் மற்றும் அன்பின்ஆவியில் இதை நாம் செய்யவேண்டும். நம்முடைய சொந்த சரீர மற்றும் மன ஆறுதலின் பெரிய மகிழ்ச்சியை முதன்மையாக நாம் நாடாமல், அவருடைய நன்மைக்காகவே செய்ய நாடுகிறோம். அவருடைய பிழையை சரியென்று நாம் எண்ணிக்கொண்டு எளிதாய் அலட்சியப்படுத்துவதன் மூலம் அவரது மேம்பாட்டிற்காக அவரை பிரியப்படுத்தாமல் தகுந்த சந்தர்ப்பம் வரும்போது அதற்கெதிராகப் போராடும்படி அன்புடன் வலியுறுத்தவும்,, இவ்வாறு அது அசவுகரியத்தை வருவித்தாலும் தாழ்மையோடும், பொறுமையோடும் ஒப்புவிக்கவேண்டும்.

இந்த ஆவி மேலோங்கி இருக்குமானால் அப்போஸ்தலர் மேலும் காண்பிக்கிறார்(**1**கொரிந்தியர் **12:24–26**), சரீரத்திலே பிரிவினை உண்டாயிருக்க தேவையில்லை. ஏனெனில் எல்லா அங்கத்தினரும் ஒருவருக்கொருவர் பரஸ்பர அக்கறையையும், பரஸ்பர அன்பையும் கொண்டிருக்கிறார்கள் –அதாவது, நன்மையாய் இருக்கிற எல்லாவற்றையும் ஊக்கப்படுத்துவதற்கும் பலப்படுத்துவதற்கும் நாடுகிற ஒரு அக்கறையை, தகுதியற்றதாய் இருக்கிற எல்லாவற்றையும் நம்முடைய உதாரணத்தினாலும் சில சமயம் அன்பான வார்த்தையினாலும் தடைசெய்ய நாடுகிற ஒரு அக்கறையை, குறைபாட்டின்மீது அதன் போர்வையைப் போடுகிற ஒரு அன்பை, பலவீனமான சகோதரரையோ அல்லது சகோதரியையோ மற்ற சகோதரர்களின்கடிந்துகொள்ளுதலுக்கு அவர்களைக் காட்டிக்கொடுப்பதற்குப் பதிலாக, அந்த தவற்றை முழுவதும் மறைப்பதற்கான முயற்சிகளைக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு அன்பில் ஒன்றிணைந்து பின்னப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் உண்மை சபையில், ஒரு அங்கம் பாடுபட்டால் எல்லா அங்கங்களும் அவரோடு பாடுபடுவார்கள் அல்லது ஒரு அங்கம் கனப்படுத்தப்பட்டால் எல்லா அங்கங்களும் அவரோடு களிகூறுவார்கள். எப்படி பூமிக்குரிய குடும்பத்தில் ஒரு அங்கத்தினர் கனத்துக்குரிய தனி சிறப்பிற்கு உயர்த்தப்படும்போது அந்த குடும்பத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களும் அந்த கனம் மற்றும் சந்தோஷத்தில் பங்கு பெறுகிறார்களோ அதுபோல, இவர்களும் ஓரளவிற்கு அந்த கனத்தில் பங்கு பெறுகிறார்கள்.

**உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது!**

அப்படிப்பட்ட சுய தியாக அன்பிற்கு தாழ்மை, தயவு, பொறுமை மற்றும் விசுவாசத்தின் ஆவி எவ்வளவு அவசியமாயிருக்கிறது. இந்த நிலையின்மீது போதகரின் வார்த்தைகள் மிகவும் ஆற்றல் வாய்ந்ததாய் இருக்கிறது – ''நீங்கள் மனந்திரும்பி(உலகத்தின் ஆவியிலிருந்து கிறிஸ்துவின் ஆவிக்கு) பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் (சாந்தத்திலும் கற்றுக்கொள்ளுதலிலும்) பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்''. இந்த ஆசீர்வதிக்கப்பட்ட கிறிஸ்துவின் பிரமாணம், அன்பின் பிரமாணம் அர்ப்பணிப்பின் மூலம் கிறிஸ்துவின் நாமத்தை தரித்திருக்கிற எல்லாரிடத்திலும் ஆட்சிசெய்ய வேண்டும். அதன் புனிதமான பரிசுத்த செல்வாக்கு, சகோதரர்கள் மத்தியில் மாத்திரமல்ல, உலகத்தின்மீதும்கூட இருதயத்தில் உள்ள தேவ கிருபையின் விளைவுக்கு ஒரு வல்லமையுள்ள சாட்சியாக நம்மிலிருந்து

பிரகாசிக்கச்செய்யவேண்டும். இவ்வாறு ஒரு ஜீவியத்திற்குள் பெறப்பட்ட தேவ அன்பு, சமாதானத்தையும் இசைவையும் மகிழ்ச்சியையும் கொண்டுவரும் என்பதை அவர்களுக்கு செயல்விளக்கமாக காண்பிக்கவேண்டும். அது நேரிய, அர்ப்பணிப்பு உள்ள உண்மையுள்ள கணவர்களை உருவாக்கும்: அதிக அன்புள்ள உண்மையுள்ள மற்றும் மென்மையான மனதுள்ள மனைவிகளை உருவாக்கும், அதிக கீழ்ப்படிதலும் அன்புமுள்ள பிள்ளைகளை உருவாக்கும். அதிக கருணையுள்ள நல்ல அண்டை வீட்டாரை உருவாக்கும் என்பதையும், இது நம்முடைய அனுபவங்களின் உபத்திரவத்தில் "கலங்கியிருக்கும் தண்ணீர்களின்மீது எண்ணெயை ஊற்றும்", அது செல்கிற இடங்களிலெல்லாம் ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிறது என்பதையும் அவர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டவேண்டும்.

------

**R 5563**

# நீதியின் ஆளுகைக்கு தயாராகுதல்

## MAKING READY FOR THE REIGN OF RIGHTEOUSNESS

**"ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது; மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிற–தற்கும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்கார–ருக்கும் பரிசுத்தவான்களுக்கும்உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர், பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும் காலம் வந்தது என்று சொல்லி, தேவனைத் தொழுதுகொண்டார்கள்"–வெளிப் 11:18.**

கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகர், யூத காலண்டரின்படி செப்டம்பர் 21ம்தேதி 1915 ம் வருடம் துவங்கினவுடன், அப்பொழுது சம்பவிக்கும் என்று அவர்கள் பார்த்திருந்ததைக் காட்டிலும் அதிகமாக எதிர்பார்த்திருந்தனர். மனித சிந்தை சுபாவ மனப்பான்மையை உடையதாகக் காணப்பட்டு, நாம் அனுதாபப்படவேண்டிய ஒன்றுடன் –அவை எப்போதும் வருவதைவிட திடீரென்று நிறைவேறும் என்றும், காரியங்கள் மிக விரைவாக உச்சகட்டத்தை அடையும் என்றும் எதிர்பார்க்கிறது. உதாரணமாக, ஏழாம் எக்காளம் தொனிக்கும் நேரத்தைக் குறித்து வேத வசனங்கள் நமக்குக் கூறுகையில், நம் திறவுகோல் வசனத்தில் பட்டியலிடப்பட்ட சில மாபெரும் நிகழ்வுகள் சம்பவிக்கத் துவங்கும் என்கின்றன. கிறிஸ்தவ ஜனங்களில் அநேகர் இவ்வாக்கியத்தை கவனித்து, இவையனைத்தும் சில மணித்துளிகளில் அல்லது சில மணிநேரங்களில் அல்லது அதிகபட்சம் சில வாரங்களில் நிறைவேறும் என்று எதிர்பார்க்கின்றனர். ஆனால் வேதவசனங்களை நாம் புரிந்துகொள்ளும்போது, அது கிறிஸ்துவின் ஆயிரவருட ஆளுகையை உள்ளடக்கியது என்பதை நாம் உணருகிறோம்.

"ஜாதிகள் கோபித்தார்கள்; அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது, மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கும்..." திருச்சபை முதலாவதாக தங்களுக்கான நியாயத்தீர்ப்பை அடையவேண்டும் –அவர்களின் விஷயத்தில் தீர்ப்பு பெறுகிறார்கள். தேவன் உலகிற்கான நியாயத்தீர்ப்புக்கென்று ஆயிரவருட நாளை நியமித்திருக்கிறார்(அப் 17:31; 2பேது3:8). "தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் (முற்பிதாக்கள்), பரிசுத்தவான்களுக்கும்(பரிசுத்தமுள்ள யாவரும்), உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும் ..(வெளி 11 :18). உலக மனுக்குலமாகிய பிந்தைய வகுப்பார் அனைவரும் ஆயிரவருட ஆட்சியின் நிலைமைகளின்கீழ், அப்பொழுது உள்ள வழியில் அவர்களது நடக்கைக்கேற்ப நியாயந்தீர்க்கப்படுவர், அவர்கள்மீது தீர்ப்பு கடந்துபோகும். "பூமியைக் கெடுத்தவர்களை நீர் கெடுப்பீர்". இதன் நிறைவேறுதலுக்கு ஆயிரவருடங்கள் தேவைப்படும் என்ற அளவுக்கு இவ்வசனம் அதிகமாக உள்ளடக்கியிருக்குமானால், மற்ற வசனங்களுக்கும் அதே வழி உண்மையாயிருக்கும்.

மற்றொரு வசனமாகிய தானியேல் 12:1,புறஜாதியாரின் மேலாதிக்கத்திலிருந்து மேசியாவின் இராஜ்யம் வரையுள்ள மாறுதலின் காலப்பகுதியைப் பற்றி விவரித்து; "..அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்"என்று அறிவிக்கிறது (தானி 12:1). இவ்வசனப்பகுதியிலுள்ள வாக்கியத்தை நம் கர்த்தர், தம் மாபெரும் தீர்க்கதரிசனத்தில் பேசியிருப்பதோடு, "..இனிமேலும் சம்பவியாததுமான.." என்று கூடுதலாக குறிப்பிட்டிருக்கிறார்(மத்24:21). யூதர்களுடைய யுகம் முடியும் வேளையில், யூதர்கள் மீது வரும் உபத்திரவத்தைப் பற்றி பேசியபிறகு, நம் குரு கூறியதாவது; "புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்"என்று கூறுகிறது(லூக் 21:24). புறஜாதியாரின் காலங்கள் முடிவுற்றிருக்குமானால், அதைக்குறித்து முன்னுரைக்கப்பட்டிருக்கும்,அவை முன்னுரைக்கப்பட்டிருக்குமானால், அவை முன் தீர்மானிக்கப்பட்டிருக்கவேண்டும், அல்லது இந்த புறஜாதியாரின் காலங்கள் எவ்வளவுகாலம் இருக்கும், எப்பொழுது முடிவுறும் என்று தேவனால் திட்டமிடப்பட்டு, அவரால் முன்பே அறியப்பட்டிருக்கும் என்று நாம் எண்ணுவது நியாயமாயிருந்து, அதை நாம் பிடித்துக்கொள்ளலாம்.

புறஜாதியாரின் காலங்கள் அல்லது வருடங்களைக் குறித்து நாம் என்ன கண்டுபிடிக்கமுடியும் என்று ஆராய்ந்தறிய தேடும்உரிமையை, நம் கர்த்தருடைய வார்த்தைகள் நமக்குப் பரிந்துரைப்பதாக காணப்படுகிறது. நம் வேதாகமங்கள் மற்றும் நம் வரலாறுகள் மூலமாக தம் அடையாளமான ஜனங்களாகிய இஸ்ரயேலரிடமிருந்து தேவன் ராஜ்யத்தை ஒரு குறிப்பிட்ட தேதியில் அகற்றினதை நாம் கண்டறிகிறோம். அச்சமயத்திலிருந்து உலகத்தினை ஆதிக்கம் செய்வதில் புறஜாதியாருக்கு வல்லமையை ஏறக்குறைய ஒரு குத்தகையாக அவர் தந்தார் .வேதாகமத்திலிருந்து நாம் பார்க்கமுடிந்தவரையில், தாவீதின் வழியில் வந்த கடைசி

இராஜாவாகிய சிதேக்கியாவிடமிருந்து கிமு 606ம் வருடம் ராஜ்யம் எடுக்கப்பட்டதை நாம் காண்கிறோம். அடையாளமான ராஜ்யத்தை தேவன் கிமு 606இல் அகற்றியிருப்பாரானால், அந்நேரத்தில் புறஜாதி தேசங்களுக்கு வல்லமையை குத்தகையாக கொடுப்பதற்கு அவர் தீர்மானித்திருப்பார், மேலும் வேதாகமமும் வரலாறும் இந்த பாடத்தைக் குறித்து என்ன கூறியிருக்கும் என்று நாம் காண்பது நமக்கு நியாயமானதாக இருக்கும்.

**புறஜாதியாரது மேலாதிக்கத்தின் சிலை**

சிதேக்கியா ராஜாவிடமிருந்து ராஜ்யத்தைப் பறித்து, புறஜாதியாருக்கு ஆளுகை செய்யும் அதிகாரத்தை தேவன் தந்தார், இந்த உலக ஆளுநர்களில் முதலாவதாக நேபுகாத்நேச்சார் பேரரசராக இருந்தார். தேவன் நேபுகாத்நேச்சாருக்கு ஒரு கனவை தந்தார் என்று நாம் வேத வசனங்களிலிருந்து கற்கிறோம். அந்த கனவை அடுத்தநாள் காலையில் ராஜா மறந்தநிலையில், தானியேல் தீர்க்கதரிசியால் பின்பு அது ராஜாவுக்கு விளக்கப்பட்டது. நேபுகாத்நேச்சாரது கனவில், ஒரு பெரிய சிலையைக் கண்டார், அதன் தலை பொன்னாகவும், அதன் மார்பும் புயங்களும் வெள்ளியாகவும், அதன் வயிறும் தொடைப்பகுதியும் வெண்கலமாகவும், அதன் கால்கள் இரும்பாகவும், பாதங்கள் இரும்பும் களிமண்ணும் கலந்த கலவையாகவும் இருந்தன.

நேபுகாத்நேச்சார் முன்பாக நின்ற இந்த சிலை, எல்லா புறஜாதியாரின் இராஜ்யங்களைக் குறிப்பிடுவதாக தானியேல் தீர்க்கதரிசி விளக்கினார். மேலும் அந்தசிலையில், நேபுகாத்நேச்சாரின் இராஜ்யமாகிய பாபிலோன், பொன்னாலான தலையைக் குறிப்பிடுவதாகவும், அடுத்ததாக மேதோ–பெர்ஷிய இராஜ்யம் வருவதாகவும், அது வெள்ளியிலான மார்பு மற்றும் புயங்களை குறிப்பிடுவதாகவும், அதனையடுத்து இராஜ்யபாரத்துக்கு வரும் கிரேக்கம், வெண்கலத்தாலான வயிறு மற்றும் தொடைகளைக் குறிப்பிடுவதாயும், அதனையடுத்து வருகிற ரோம இராஜ்யம் இரும்பாலான கால்களைக் குறிப்பிடுவதாகவும், அதற்கடுத்ததாக வருகிற பரிசுத்த ரோமப் பேரரசு என்று அழைக்கப்படுவது, இரும்பும் களிமண்ணும் கலந்த பாதங்களை குறிப்பிடுவதாகவும் இருந்தது. இறுதியாக, தற்கால ஐரோப்பிய அரசாங்கம், 10 விரல்களால் குறிப்பிடப்பட்டு, அதுவும் இரும்பும் களிமண்ணுமான கலவையால் ஆனதாக விளக்கப்பட்டது.

பேரரசனாகிய நேபுகாத்நேச்சாருக்கு காண்பிக்கப்பட்டு, தானியேல் தீர்க்கதரிசியால் விளக்கப்பட்ட இந்த தரிசனத்தின்படி, அந்த சித்திர சிலையை பூமியெங்கும் ஆளுகை செய்யவிருந்த அனைத்து புறஜாதி அரசாங்கங்களை குறிப்பிடுவதற்கு தேவன் வடிவமைத்தார்.

இந்த விஷயம் நமக்கு தெளிவாக்கப்பட்டபிறகு, இந்த உலகளாவிய பேரரசுகள் உலகை கட்டுப்படுத்தவிருக்கும் காலப்பகுதிகளே புறஜாதியாரின் காலங்கள் என நாம் கூறுகிறோம். இந்த புறஜாதியாரின் காலங்களைக் குறித்து தேவன் நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலம் குறிப்பிட்டிருக்கிறார்(லூக் 21 :24). தற்போது, அவை எவ்வளவு காலங்கள், எவ்வளவு வருடங்கள் என்று பழைய ஏற்பாட்டில் நாம் கண்டறியலாம். வேதாகம பயன்பாட்டின்படி, ஒரு காலம் என்பது ஒரு வருடத்தைக் குறிக்கும்.

இன்னும் கூடுதலாக இப்பாடத்தைக் கற்கும்போது, இஸ்ரயேலர்கள் ஏழத்தனையான காலங்கள் தேவதயவற்ற நிலையை அடையவேண்டும் என்று அவர்களிடத்தில் தேவன் கூறினதை நாம் காண்கிறோம்(லேவி 26:14–28). இவை சொல்லர்த்தமான வருடங்களாக இருக்கமுடியாது, ஏனென்றால் இஸ்ரயேலர் ஏழு வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான காலஅளவுள்ள பல உபத்திரவங்களை கடந்துவந்தனர். இந்த காலங்கள் என்பது எவ்வகையிலான வருடங்களாக இருக்கும் ? என்ற கேள்வி இங்கு எழுகிறது. இவைகள் சொல்லர்த்தமான வருடங்களாக இல்லையெனில், அவை உருவகமானதாக இருக்கும் என நாம் முடிவுக்கு வருகிறோம். யூதருடைய கணக்கீட்டின்படி, ஒரு சொல்லர்த்தமான வருடம் என்பது 360 நாட்களைக் கொண்டது என்றால், தீர்க்கதரிசனத்தின்படி ஒரு நாள் என்பது ஒரு வருடக் காலத்தைக் குறிக்கும்(எசே4:6). ஒவ்வொரு உருவகமான காலம் என்பது 360 வருடங்களாக இருக்கும். ஆகவே ஏழத்தனையான காலங்கள் என்பது 7 x 360 வருடங்கள், அதாவது 2520 வருடங்கள்.

இவ்வாறாக இதுவே இஸ்ரயேலர் கவிழ்க்கப்படும் காலப்பகுதியாக இருப்பதை நாம் காண்கிறோம்(எசே21:25–27). இந்த காலப்பகுதியில் இஸ்ரயேலரது இராஜ்யமும் அவர்களது அரசாங்கமும் புறஜாதியாருக்கு கீழ்ப்பட்டிருக்கும். இதற்கிடையில் தேவன் தம்முடைய சொந்த அடையாளமான இராஜ்யத்தை ஒதுக்கிவைத்துவிட்டு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு என் இராஜ்யத்தை ஸ்தாபிக்க நான் தயாராகவில்லை , இதற்கிடைப்பட்ட காலத்தில் உலகிற்கு உங்களால் என்னசெய்ய முடியும் என்று நிரூபிப்பதற்கான வாய்ப்பு உங்களுக்கு வழங்கப்படுகிறது. உங்களால் கூடுமான அளவு சிறந்த இராஜ்யத்தை நிறுவுங்கள், நியாயமாகவும் ஞானமாகவும் உலகை ஆளுவதற்கு சிறப்பானதைச் செய்யுங்கள்'' என்று தேவன் புறஜாதிகளிடம் கூறினார்.

**பூமியின் உலகளாவிய பெரிய பேரரசுகள்**

உலகை சிறந்தமுறையில் ஆட்சிசெய்வோம் என்ற முழு நம்பிக்கையுடன், பாபிலோனியர்கள் அவ்வாறு செய்ய முயன்றனர், ஆனால் விரைவில் ஒரு சோகமான உச்சக்கட்டத்தை அடைந்தனர். அதைத்தொடர்ந்து மக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்ட ஒரு பொதுவான திட்டம் வந்தது, செல்வந்தர்கள் எல்லாவற்றையும் அடைந்தனர், ஏழைகள் நடைமுறையில் எதுவும் பெறவில்லை. அடுத்த ஆட்சி அதிகாரத்துக்கு வந்த மேதியர்கள் மற்றும் பெர்ஷியர்களுடைய துவக்கம் மிக நன்றாகவே இருந்தது, நீதியான வடிவமைப்புகளுடனும், சரியானதைச் செய்ய முயற்சிப்பதிலும்..

மேதோ–பெர்ஷியப் பேரரசராகிய கோரேஸை நாம் நினைவுகூர்கையில், அவர் யூதர்களை விடுவித்து எருசலேமுக்கு திரும்பிச்செல்ல அனுமதி அளித்தார். மேலும் தேவனுக்குரியவைகளாயிருந்த ஆலயத்தின் விலையுயர்ந்த பரிசுத்தமான பாத்திரங்களை அவர் வைத்துக்கொள்ளாமல், இஸ்ரயேலரிடம் திரும்ப கொடுத்தனுப்பினார். கோரேஸ் நீதியும் நியாயமுமான ஒரு அரசாங்கத்தைப் பராமரிக்க முயன்றார். ஆனால் விரைவில் மேதோ–பெர்ஷிய பேரரசு ஜனங்களுக்கு திருப்தியைக் கொண்டுவரவோ, அல்லது உலகிற்கு ஒரு பெரிய ஆசீர்வாதமாக நிரூபிக்கவோ தவறிவிட்டது.

அடுத்து, கிரேக்கர்களுடைய முறை வந்தது. மகா அலெக்ஸாண்டர் தன் இருபத்தியோராவது வயதுக்கு முன்பே, உலகை ஜெயித்திருந்தார். கிரேக்கம் குறிப்பிட்ட காலத்துக்கு உலகை ஆண்டது. கிரேக்க நாகரீகமும், கிரேக்க தத்துவத்தின் பல்வேறு அமைப்புக்களும் உலகமுழுவதும் சென்றடைந்தன. எல்லா வகைப்பட்ட பாடங்களின் மீதான கிரேக்கக் கோட்பாடுகள் பூமியின் பெரிய நாடுகள் அனைத்திலும் ஓரளவு ஊடுருவின. நாம் வாழ்கிற இந்நாட்களிலும் கிரேக்கத்திலிருந்து சென்ற ஆதிக்கம் உலகெங்கிலுமுள்ள ஒவ்வொரு வடிவிலான மதத்திலும் உணரப்பட்டு வருகிறது. கிறிஸ்தவ மண்டலங்களின் மதம் என்பது, கிரேக்கப் புராணம் மற்றும் மோசேயின் பிரமாணம், யூத தீர்க்கதரிசிகளின் போதனைகளோடு சேர்ந்த கிறிஸ்தவத்தின் கலவையாக உள்ளது. ஆனால் கிரேக்கம் அதன் நாளை முடித்து, அதிகாரத்தின் செங்கோலுக்கு விடைபெற வேண்டியிருந்தது.

அடுத்து வந்த ரோம சாம்ராஜ்யத்தின் அரசாங்கம் பல்வேறு வடிவங்களைக் கொண்டிருந்தது. அதன் ஒவ்வொரு வடிவமும் உலக ஞானமாயும் நீதியாயும் இருந்து ஆள்வதற்கு முயற்சித்தது. இவை எல்லாவற்றின் முடிவு எவ்வாறிருந்த–தெனில், பெரிய அளவிலோ அல்லது சிறியளவிலோ அதிகாரத்தை மையப்படுத்தி, ஒரு சிலர் கைகளில் மட்டும் செல்வம் குவிந்தன. திரளான ஜனங்கள் ஆசீர்வதிக்கப்–படவுமில்லை, திருப்தியடையவுமில்லை. பின்பு ரோம அமைப்பு விழுகைக்குள் செல்லத் துவங்கியது.

படிப்படியாக, கிறிஸ்தவமும் ரோமானிய சமுதாய வல்லமையும் கலந்த கலவை ஆளுகைக்கு வந்தது. சிலையிலுள்ள பாதம், இரும்பு மற்றும் சகதியுள்ள களிமண் கலவையாக இது குறிப்பிடுகிறது. சிலையின் பாதத்தை களிமண் மூடியிருந்ததுபோல, கிறிஸ்தவத்தின் பளபளப்பு சமூக அதிகாரத்தை மூடியிருந்தது. பளபளப்பானது தேசங்களை நிஜமாகவே கிறிஸ்தவர்களாக மாற்றவில்லை, மாறாக, இந்த இராஜ்யங்களும், அரசாங்கங்களும் கிறிஸ்தவர்களைப்போல் தங்களைத்தாங்களே நோக்கும்படி மட்டும் செய்தது. இதனாலேயே அவர்கள்; கிறிஸ்தவ ஜெர்மனி, கிறிஸ்தவ பிரிட்டன், கிறிஸ்தவ பிரான்ஸ், கிறிஸ்தவ ரஷ்யா, கிறிஸ்தவ இத்தாலி, கிறிஸ்தவ ஆஸ்திரியா – ஹங்கேரி என்று தங்களை அழைத்துக்கொண்டனர்.

**கிறிஸ்துவின் இராஜ்யத்தின் போலி**

சேற்று களிமண், பார்வைக்கு கல்லைப்போலவே தோற்றமளிக்கும். தேவன் தம் இராஜ்யத்தை அடையாளமாகக் கூறுவதற்கு ஒரு கல்லைப் பயன்படுத்தினார், அதே அடையாள சித்திரத்தில் பெயர்கிறிஸ்தவர்களைக் குறிப்பிடுவதற்கு, சேறு நிறைந்த களிமண்ணும் இரும்பும் கலந்த கலவையை அவர் உபயோகிக்கிறார். கிறிஸ்துவின் இராஜ்யம் இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை. எனினும், தேவன் இந்த இராஜ்யங்களை ஆளுகிறார் என்று அவர்கள் அறிவித்து, அவர்களுடைய எல்லா நாணயங்களிலும் கிறிஸ்தவ தேசங்கள் என்று தங்களை அழைத்து, கிறிஸ்துவின் இராஜ்யம்போல் வெளிப்புறத்தில் ஒத்திருக்கும் இந்த தற்கால அமைப்புக்களின் இடிபாடுகளின்மீதே கிறிஸ்துவின் இராஜ்யம் கட்டப்பட்டிருக்கும். ஒட்டுமொத்தமாக அவர்கள் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தை அர்த்தப்படுத்துகிற கிறிஸ்தவ மண்டலமாக தங்களைஅழைத்துக்கொண்டனர். அவர்கள் இருண்ட யுகங்களில் உண்மை சபையல்ல, மாறாக பெயரளவிலான சபையின் போதனைகள் மூலமாக இதைச்செய்ய வழிநடத்தப்பட்டனர். இவர்களே கிறிஸ்துவின் சபை என்று ஜனங்களை வஞ்சித்து, நிஜ திருச்சபையை துன்புறுத்தினர்.

உண்மை திருச்சபை அல்லாத அனைத்தையும் நாங்கள் பிரிவினைவாத சபைகளாக சேர்க்கிறோம். பல போலியான சபைகள் உள்ளன; அவை அனைத்தும் சரியானதாக இருக்கமுடியாது. எது சரியான ஒன்று ? என்பதே கேள்வியாயுள்ளது. மற்றவர்களை சரியானது என்று ஒருவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், எல்லோரும் தங்களுடையதே சரி என்றே உரிமைகோருகிறார்கள். கிறிஸ்துவின் சபையைப் பற்றி வேதாகமம் கூறும் விளக்கத்திலிருந்து நாம் முடிவுசெய்தபடி, அவற்றில் ஒன்றுகூட சரியானதல்ல. கிரேக்கம், ஆங்கிலேயம், ஜெர்மன் மற்றும் சுவீடன் சபைகளிலிருந்தும், பேப்டிஸ்ட், மெத்தடிஸ்ட், லூதரன், பிரிஸ்பிடேரியன் சபைகளிலிருந்தும் மற்றும், எந்த சபைகளிலும் கலந்துகொள்ளாத ஜனங்களாக இருந்தாலும், தேவனிடத்தில் யார் பிரதிஷ்டை செய்திருக்கிறார்களோ அவர்களை மட்டுமே அவர் அங்கீகரிக்கிறார். தேவனுடைய பரிசுத்தவான்கள் அனைவரும் அவரது திருச்சபையின் அங்கங்களாக இருக்கின்றனர், மற்ற எல்லாரும் வெறும் போலி கிறிஸ்தவர்களே. அவருடைய சபைகள் என்று தங்களை அழைக்கும் இந்த மாபெரும் அமைப்புக்கள், தேவனுடைய அதிகாரம் பெறாதவை, வேத வசனங்களின் அங்கீகாரம் இல்லாதவைகள். அவைகள் மனித அமைப்புக்களே, அவற்றில் பரிசுத்தவான்கள் மட்டுமே தேவனால் அவருடைய ஜனங்களாக அங்கீகரிக்கப்படுகிறார்கள்.

இந்த போலியான சபைகளை பாபிலோன் என்று வேதாகமம் குறிப்பிடுகிறது, குழப்பம் என்று இந்த வார்த்தைக்கு அர்த்தம். அவைகள் எல்லா வகுப்பாரையும் உள்ளடக்கினதாக இருப்பதோடு, எல்லா வகையான போதனைகளையும் கொண்ட குழப்பமான

கலவையாயிருக்கிறது, எனவே தேவனும் அவருடைய வார்த்தையும் ஆதரிக்கும் எதற்கும் முற்றிலும் முரணாயிருக்கிறது. இந்த குழப்பம் நிறைந்த ஜனக் கூட்டத்திலிருந்து தேவன் தம் ஜனங்களை அழைத்து கூறுகிறார்; "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்"(வெளிப்18:4) என்று கூறுகிறார். மேலும் கிறிஸ்தவ மண்டலம் என்று அழைக்கப்படும் இந்த மாபெரும் அமைப்புக்கு ஒரு பெரும் பேரழிவு திடீரென்று வந்து, இந்த அமைப்பை முற்றிலும் அழிக்கும் என்று தம் ஜனங்களாகிய அவர்களுக்கு கூறுகிறார்.

**புறஜாதியாரின் காலங்கள் முடிவுறுதல்**

தேவனுடைய வசனத்தைக் கற்றிருந்து, ஏழு அடையாள வருடங்களாயிருக்கிற 2520 வருடங்களை நாம் கணக்கிட்டிருக்கிறோம். கிமு 606 இலிருந்து துவங்கப்பட்ட அக்காலங்கள் அக்டோபர் 1914ஐ எட்டுவதை நம்மால் முடிந்தவரை கணக்கிட்டு கண்டுபிடித்துள்ளோம். இந்த வருடம் தான் புறஜாதியாரின் காலம் முடியும் வருடம் என்று நேர்மறையாக(positively) நாம் கூறவில்லை. ஒவ்வொருவரும் வரலாற்றின் உண்மைகளை நோக்கிப்பார்த்து, தன்னை உறுதிப்படுத்திக்கொள்ளும்படி இதை விட்டுவிடுகிறோம். அந்தக் காலம் இத்தேதி தானா? அல்லது வேறு தேதியாயிருக்குமா? என்று நாம் கேட்டபோது, நாம் அறிந்தவரைக்கும் இந்த வருடம் 1914 அக்டோபர் மாதம் புறஜாதியாருக்கு அதிகாரம் குத்தகையாக கொடுக்கப்பட்டது முடிவடைய இருக்கிறது என்று நம்மில் அநேகர் முடிவாகக் கூறினர். ஏனென்றால் அக்டோபர் மாதம் வரும்போது, யூத வருடத்தின் இறுதிக்கு நாம் வந்துவிடுகிறோம். நிஜமாகவே, யூத கணக்கீட்டின்படி செப்டம்பர் 20ம் தேதியில் 1914ம் வருடம் முடிவுறுகிறது.

புறஜாதியாரின் காலங்கள் முடிவடைந்ததா? இல்லையா? என்ற கேள்வி இப்போது எழுகிறது. "முடிவுறவில்லை" என்று சிலர் கூறலாம், மற்றவர்களோ; புறஜாதியாரின் காலங்கள் முடிவடைந்திருக்குமானால், புறஜாதியார் எல்லா அதிகாரத்திலிருந்தும் கட்டுப்பாட்டிலிருந்தும் முற்றிலும் அகற்றப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கலாம், அதனால் கிறிஸ்துவின் இராஜ்யமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும், புறஜாதியாரின் காலங்கள் முடிந்திருக்கும்போது நாம் எதிர்பார்க்கும்படி அநேக பெரிதான காரியங்கள் நடைபெறுமல்லவா?" என்று கூறுவர்.

ஒரு சிலருக்கு ஒரு கருத்து, மற்றவர்களுக்கு வேறு கருத்து இருப்பதை நாம் காண்கிறோம். இரவு 12 மணிக்குப் பிறகு 60 நிமிடம் அல்லது 60 நொடிகளில் தீமை அழிக்கப்படுகின்ற மாபெரும் உன்னத மாறுதலை எப்புறமும் காணலாம் என்று சிலர் எண்ணுகின்றனர், ஆனால் புறஜாதியாரின் ராஜ்யங்கள் ஒரு மணிநேரத்திற்குள் அல்லது ஒரு நாளுக்குள் திடீரென முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்று எதிர்பார்ப்பது, நியாயமான எதிர்பார்ப்பாக இருக்குமா? தேவன் அவ்வாறு சொல்லியிருந்தாரானால், அது வேறு, தேவன் தம் சித்தத்தை எல்லா இடங்களிலும் செய்ய எல்லா வல்லமையையும் பெற்றிருக்கிறார் என்று நாம் அறிவோம். ஆனால் செப்டம்பர் 20ம்தேதி இரவு உறங்கச்செல்கிறோம், செப்டம்பர் 21ம்தேதி காலையில், உலகில் எல்லா இராஜ்யங்களும் அழிக்கப்பட்டு, கிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும், பரிசுத்தவான்கள் மகிமையிலிருப்பர் என்று, அப்படிப்பட்டதொரு திடீர் மாறுதலை வசனத்தின் எந்த உணர்வுப்படியும் எதிர்பார்க்கலாமா? அப்படிப்பட்ட நிகழ்வு மின்னலுக்கொப்பான மாற்றமாக இருக்கும்! அவ்வாறு யாரும் யோசித்து நியாயப்படுத்துவார்கள் என்று நாம் எண்ணவில்லை. அப்படிப்பட்ட எதிர்பார்ப்பை யாராகிலும் கொண்டிருந்தால் அது உத்திரவாதமில்லாதது.

**தேவனுடைய இரண்டு சாட்சியங்கள்**

வெவ்வேறு காலகட்டங்கள் முடிவுற்றபிறகு, உடனடியாக என்ன சம்பவித்தது என்று தற்போது திரும்பிப் பாருங்கள். உதாரணமாக, வேதாகமத்தில் மிகப்பெரும் காலப்பகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன, அதாவது 1260 அடையாளமான நாட்கள், 1290 மற்றும் 1335 மற்றும் 2300 நாட்கள் ஆகியவை(தானியேல் 12:7,11,12; 8:13,14). இக்காலப்பகுதிகளை விவரமாக வேதாகம விளக்கவுரைகளின் தொகுதிகளில் கொடுத்திருக்கிறோம்.

1260 வருடங்கள் 1799இல் முடிவடைந்தது. அதன் தொடக்கத்திலிருந்து உச்சக்கட்டம்வரை, துன்புறுத்தும் வல்லமை ஆதிக்கம் செலுத்தியது. 1260 வருடங்கள் முடிவுற்றபோது, அந்த துன்பம் ஒருநாளில் அல்லது ஒரு வருடத்தில் நிறுத்த ஏதாகிலும் செய்யப்பட்டதா? இல்லை! தேவனுடைய இரண்டு சாட்சிகளும் பரலோகத்துக்கு உயர்த்தப்பட்டதே அதன் முடிவுகளில் ஒன்றாக இருந்தது. தேவனுடைய இந்த இரண்டு சாட்சியங்களாகிய பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் பரலோகத்துக்கு உயர்த்தப்பட்டது, அதாவது இதற்கு முன்பு அனுபவித்திராத பெரும் செல்வாக்கு மற்றும் கண்ணிமான நிலைக்கு ஜனங்களுடைய பார்வையில் உயர்த்தப்பட்டன.

**பரலோகத்துக்கு உயர்த்தப்பட்டன**

போப்புமார்கள் மற்றும் ஆயர்களது குரலே திருச்சபையின் குரலாகவும், வேதாகமம் திருச்சபையின் குரலுடன் இணைந்து செல்வதாகவும், திருச்சபையின் குரலை உறுதிப்படுத்த மட்டுமே வேதாகமம் உள்ளதாகவும், அக்காலத்துக்கு முன்னர்(1799ம் வருடத்திற்கு முன்னர்) சபை நம்பியது. ஆனால் 1260 தீர்க்கதரிசன நாட்கள் முடிவடைந்தபிறகு, வேதாகமம் ஒரு புதிய நிலைப்பாட்டை எடுக்கத் தொடங்கியது.

கிபி 1803 மற்றும் 1813ம் வருடங்களுக்கிடையில் நம் மாபெரும் வேதாகம சங்கங்களில் பெரும்பாலானவை நிறுவப்பட்டன. அதன்பிறகே, எல்லா மொழிகளிலும், மலிவான வடிவத்திலும் வேதாகமம் அச்சிடப்படத் தொடங்கியது,

வேதாகமம் எல்லா தேசங்களுக்கும் சென்றுசேரத் தொடங்கியது. வேதாகமம் ஜனங்கள் முன்பாக உயர்த்தப்பட்டது, பரலோகத்துக்கு உயர்த்தப்பட்டது என்பது ''வானத்துக்கு உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே!'' என்று நம் கர்த்தர் சொன்னதையே அர்த்தப்படுத்தினது. இருண்ட யுகங்களின்போது வேதாகமம் வகித்த இழிவான நிலைக்கு மாறாக, அது பெரிதும் உயர்த்தப்பட்டது. ஆனால் இந்த உயர்நிலைக்கு அதைக் கொண்டுவருவதற்கு பல வருடங்கள் செலவிடப்பட்டன.

### முடிவுக்காலம்

நிச்சயமாக, தப்பறையானது எல்லா தேசங்களிலும் சத்தியத்தை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ எதிர்த்துப் போராடியிருந்தாலும், சத்தியம் படிப்படியாக முன்னோக்கி சென்றுகொண்டிருக்கிறது. பல்வேறு நிகழ்வுகள் நிகழவிருந்த முடிவுக்காலத்தின் துவக்கம் 1799ம் வருடத்தை குறியிட்டது. தீர்க்கதரிசனத்தின்படி,''அறிவும் பெருகிப்போம்''; ''ஞானவான்களோ உணர்ந்துகொள்வார்கள்'' ; ''யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்'' (தானி 12:1–10). 1799ம் ஆண்டைத் தொடர்ந்து நடைபெறவிருந்த இந்த பல்வேறு முன்கணிப்புகள், கடந்த நூற்றாண்டு முழுவதும் நிறைவேறும் செயல்பாட்டில் இருந்தன. முடிவுக்காலம் துவங்கினபிறகு, சிறிதுகாலத்திற்கு, இங்கும் அங்குமாக ஓடி ஆராய்வது எந்த குறிப்பிட்ட வளர்ச்சியையும் எட்டவில்லை.நீராவிசக்தியைப் பயன்படுத்துவதில் முன்னேற்றம் படிப்படியாக இருந்தது. முதலில் நீராவிப்படகு வந்தது, பின்பு, முதல் இரயில் வந்தது. இந்த அவசியமான கண்டுபிடிப்புக்கள், முன்னறிவிக்கப்பட்ட, ''இங்குமங்கும் ஓடி ஆராய்வதற்கு முன்னதாகவே இருக்க வேண்டும்.

கடந்த சில வருடங்களுக்குள் மட்டுமே நாம் உயர்ந்தபட்ச வேகத்தை இரயில்களிலும், நீராவிக் கப்பல்களிலும் எட்டியிருக்கிறோம். மிக சில இரயில்களே, தற்போது ஒருமணிநேரத்திற்கு 24 மைல்களைக் காட்டிலும் வேகமாக செல்கின்றன. அதேபோல், மிக வேகமான நீராவி படகுகளின் வகைகளான மௌரிட்டானியா மற்றும் லூசிடானியா ஆகிய பெரிய நீராவிக் கப்பல்களிலும் அப்படித்தான் உள்ளன. உண்மையில் பிரிட்டிஷ் அரசாங்கம் போர்க்காலத்தில் மிக வேகமாகச்செல்லும் சில கப்பல்களை கொண்டிருக்க விரும்பவில்லை என்றால், இந்தக் கப்பல்கள் கட்டப்பட்டிருக்காது.

நமது நாளை சிறப்பிக்கும் இந்த அற்புதமான கண்டுபிடிப்புக்கள், 1799முதல் படிப்படியாக வந்துள்ளன. அந்த காலகட்டத்தின் முதல்பகுதிக்குப் பிறகு, உச்சத்தை எட்டுகிற அறிவுப்பெருக்கம் வந்தது. நாகரீக நாடுகளில் கட்டாயக்கல்வி ஜனங்களுக்கு தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும் இடத்தில் நாம் இப்போது இருக்கிறோம். சில தேசங்கள் கல்வியைத் தடுக்க முயற்சிக்கின்றன. ஜனங்களிடையே புரட்சிகர உணர்வு ஏற்படுவதற்கு கல்வியே அடிப்படையாய் உள்ளது என்றும், ஜனங்களிடம் அது குறைவாக இருந்தால் பிரச்சனைகள் குறையும் என்றும் ஒரு பிரபல ரஷ்ய அரசியல்வாதி சமீபத்தில் கூறினார். சில கட்டுப்பாடுகள் இல்லாதிருக்குமானால், கல்வி அபாயகரமான ஒன்று என்ற பாடத்தை மற்ற எல்லா நாடுகளும் ஏற்றவேளையில் கற்றுக்கொள்வர். புத்துயிரடையாத இருதயத்துக்கு, அது புத்துயிரடையாத கையிலுள்ள வல்லமையைக் குறிக்கிறது. இது எப்பொழுதும் பாதுகாப்பானது அல்ல.

### காலக்கணக்கை புரிந்துகொள்வதற்கான ஏற்றவேளை

''ஞானவான்களோ உணர்ந்துகொள்வார்கள்'' என்ற தானியேல் தீர்க்கதரிசியின் அறிக்கை, அதே அதிகாரத்தில் குறிப்பிடப்பட்ட 1290 நாட்களின் முடிவை தொடர்புபடுத்துவதாக காணப்படுகிறது. இக்காலப்பகுதி 1829ல் முடிவுக்கு வந்தது. 1829க்குப் பிறகு சிறிது நேரத்திலேயே கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நெருங்கிவிட்டதற்கான செய்தி, வில்லியம் மில்லரால் விசேஷமாக பிரகடனப்படுத்த துவங்கினது. தேவ வசனம் உயர்த்தப்பட்டதன் விளைவாக குறிப்பிட்ட சில போதனைகள் மிகவும் முக்கியமான வழியில் கொண்டுவரப்பட்டன.

தானியேல் தீர்க்கதரிசியால் குறிப்பிடப்பட்ட மற்றொரு தீர்க்கதரிசன காலப்பகுதி 2300 வருடங்கள் ஆகும். இக்காலப்பகுதி குறிப்பிட்ட காரியங்களை குறியிட்டு, இந்நாட்கள் முடிவடையும்போது ஆலயம் சுத்திகரிக்கப்படுதல் நடைபெறவேண்டும். இருண்ட யுகங்களின் அசுத்தங்களிலிருந்து, ஆலய வகுப்பாராகிய உண்மை திருச்சபையைத் தூய்மைப்படுத்தும் இந்தவேலை, 1846ல், அதாவது 2300 நாட்களின் நிறைவேறுதலின் காலத்தில் உச்சநிலையை அடைந்தது என்று நாம் நம்புகிறோம். ஆனால் சுத்திகரிக்கும் வேலை ஒரு நொடியிலோ அல்லது ஒரு நாளிலோ அல்லது ஒரு வருடத்தில்கூட நிறைவேற்றப்படவில்லை. சுத்திகரித்தல் வரையறைக்குட்பட்டிருந்தது.

அடுத்து 1335 நாட்களுக்கு நாம் இப்போது வருகிறோம்; இது 1875ல் உச்சகட்டத்தை அடைந்தது. இந்நாட்களைக் குறித்து தீர்க்கதரிசி கூறியிருந்தார்; ''ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள்(வருடங்கள்) மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்''(தானி 12:12). அந்நேரத்தில் தேவ ஜனங்களுக்கு மாபெரும் ஆசீர்வாதங்கள் வந்தன. நம் கர்த்தருடைய பிரசன்னத்தின் காலம் வந்திருந்தது.

### நம் கர்த்தருடைய பரொஷியாவுக்கான அடையாளங்கள்

1874ம் வருடத்திலிருந்து மனுஷகுமாரனுடைய பரொஷியாவில் நாம் வாழ்ந்து வருகிறோம். நம் கர்த்தர் தம் ஜனங்களிடம் வரும் நேரத்தில், ''கதவைத் தட்டும்'' அவருடைய சத்தத்தை, ''தீர்க்கதரிசனங்களின் தட்டுதலை''நாம் எதிர்பார்க்க வேண்டும். யாரெல்லாம் தங்கள் இருதயத்தை திறந்து, அர்ப்பணித்த சிந்தையின் மனப்பான்மையில் காரியங்களை ஏற்றுக்கொள்கிறார்களோ, அவர்களுக்கு கர்த்தர் ஒரு ஊழியக்காரரைப்போல் இடைகட்டிக்கொண்டு, அவர்களருகில் வந்து அவர்களுக்கு ஊழியஞ்செய்வார்– வெளி3:20.

கடந்த 40 வருடங்களாக வேதமாணவர் கூட்டத்தாராக

நாம் பெற்றிருக்கிற எல்லா விசேஷ ஆசீர்வாதங்களும் கர்த்தருடைய பிரசன்னத்தின் விளைவாகவே இருக்கிறது. அவர் நம் ஊழியக்காரராயிருந்து, தம் பண்டகசாலையிலுள்ள பழையதும் புதியதுமானவைகளை கொடுத்துவருகிறார். இந்த பழைய விஷயங்கள் ஒரு புதிய வழியில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மீட்பின் போதனை, ஈடுபலி, கிறிஸ்துவின் சரீரம் என்ற வார்த்தைகளின் பொருள், கிறிஸ்துவின் மரணம் எப்படி நம் பாவங்களுக்கான சரிக்கட்டுதலாயுள்ளது என்பதற்கான விளக்கம், திருச்சபைக்கு அவருடைய புண்ணியத்தை வழங்குதல், உலகிற்கு தம் புண்ணியத்தை அளித்தல், சபை பரிசுத்தமாகுதல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது, பரிசுத்தஆவியால் ஜெநிப்பிக்கப்படுதல், ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாகுதல், ஒரு புதுசிருஷ்டி என்ற பதம் எதைக் குறிக்கிறது ? புதுசிருஷ்டி பழைய சிருஷ்டியிலிருந்து எப்படி வேறுபடுகிறது, இந்த புது சிருஷ்டிக்கு முதலாம் உயிர்த்தெழுதல் மகிமை நிறைந்த சிலாக்கியங்களையும், தெய்வீக ஆசீர்வாதமாகிய மகிமை, கனம், சாவாமையை எப்படி கொண்டுவருகிறது ? போன்ற சத்திய போதனைகள் மனிதத்திறமையினால் அல்ல, மாறாக கர்த்தருடைய ஏற்றவேளை வந்திருக்கிறதினால் தெளிவாக்கப்படுகின்றன.

நம் கர்த்தர் கண்ணுக்கு புலப்படாமல் பிரசன்னமாயிருந்து, தெய்வீகத் திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் வெளிச்சத்துக்கு கொண்டுவருகிறார், நீதிமானாகுதல், பரிசுத்தமாகுதல், மீட்பு போன்ற பழைய காரியங்களைக் குறித்து மட்டுமல்ல, நம் கர்த்தர் எப்படி மாம்சமாகி நம்மிடையே வாசம்பண்ணினார், பூமிக்குரிய தாயினிடத்தில் பிறந்தாலும் அவர் எப்படி பரிசுத்தரும், மாசில்லாதவரும், குற்றமற்றவருமாய் இருந்தார், என்ற தேவனுடைய செயல்தொடர்பின் தத்துவத்தைக் குறித்தும் வெளிச்சத்தை நமக்கு கொடுத்தார். முன்பு இவையனைத்தும் நமக்கு குழப்பத்தை அளித்தது, தற்போதோ வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இவையனைத்துமே, கர்த்தர் தம் ஜனங்களுக்கு ஊழியம் செய்வதற்கான சாட்சியங்களாக உள்ளன. கர்த்தர் நமக்கு “ஏற்றவேளையிலான போஜனத்தை” அளித்துவருகிறார். இந்த ஆவிக்குரிய ஆகாரத்தை பெறுவதால் அநேகர் பரிசுத்தமாக்கப்பட்டு, மறுரூபமாகுதலின் சிந்தையை அடைந்துள்ளனர். இது இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதிலும் சகோதரருக்காக தங்கள் ஜீவியங்களை கையளிப்பதிலும் சந்தோஷமடையும்படி அவர்களை வழிநடத்துகிறது.

**அறுவடைக்காலம்**

1875ம் வருடம் வந்தவுடன் இருபத்து நான்கு மணிநேரத்திற்குள் அனைத்தும் நிறைவேறிவிட்டதா ? நிச்சயமாக இல்லை. நாம் அறுவடைக்காலப்பகுதியைப் பெற்றிருக்கிறோம், நிசப்தமாகவும் படிப்படியாகவும் அறுவடைப்பணி நடைபெற்று வருகிறது. கர்த்தர் தாம் கூறினபடி தம் ஜனங்களிடையே தேவவசனத்தைக் கொண்டு நியாயம் விசாரித்துவருகிறார்.

**பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல்**

தேவவசனம் சாட்சியிடுகிறபடி, உயிர்த்தெழுதல் 1878இல் துவங்கினதை நாம் புரிந்துகொள்கிறோம். மரித்த பரிசுத்தவான்களைப் பொறுத்தவரையில், மாபெரும் மாறுதலுக்கான முதலாம் உயிர்த்தெழுதலின் நேரம் வந்துவிட்டது. மேலும் வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதியவரால், “...கர்த்தருக்குள் இது முதல் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்” என்று குறிப்பிடப்பட்ட காலம் அங்கே துவங்கிவிட்டதை நாம் புரிந்துகொள்கிறோம். ஒரு குறிப்பிட்ட காலத்தை இங்கு அவர் குறியிடுகிறார்; இக்காலத்துக்கு முன்பு மரிப்பது, ஆசீர்வாதமாய் இருக்காது, அதற்குப்பின்பு அது ஆசீராயிருக்கும். இதுமுதல் : “அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போகும் . ஆவியும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறது”– வெளிப் 14:13.

அந்த குறிப்பிட்ட நேரம் 1878இல் வந்தது என்று நாம் நம்புகிறோம். அப்பொழுது அப்போஸ்தலர்கள் எழுப்பப்பட்டதோடு, கிறிஸ்து இயேசுவில் உண்மைத்தன்மையோடிருந்த அனைவரும், உறங்கிக்கொண்டிருந்த கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் அனைவரும் எழுப்பப்பட்டனர். கிறிஸ்துவின் சரீரம் உயிர்த்தெழுப்பப்படுவதன் துவக்கம் அதுவே, உலகம் நியாயந்தீர்க்கப்படுவதற்கு முன்பதாக, தம் ஜனங்களை முதலாவதாக கர்த்தர் நியாயந்தீர்க்கிறார். அவர் வந்திருக்கும்போது, தம் சொந்த ஊழியக்காரர்களை அழைத்து அவர்களிடமே கணக்கு கேட்பார் – உலக ஜனங்களிடம் அல்ல என்று அவர் முன்னறிவித்தார். முன்னரே திரைக்குள் சென்றிருந்த தம் திருச்சபை அங்கங்களுக்கு வெகுமதி அளித்து, முதலாம் உயிர்த்தெழுதலில் அவர்களுக்குப் பங்களிப்பார். அதன்பிறகு,“உயிரோடிருக்கிறவர்களும் மீந்திருக்கிறவர்களுமாகிய” நம்மிடத்தில் செயல்தொடர்பு கொள்கிறார். ஏழாம் எக்காளமாகிய கடைசி எக்காளம் தொனிக்கும்போது, கர்த்தருடைய ஜனங்களாயிருக்கிற ஒவ்வொருவரும் மரிக்கும்போது, “ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவர்” 1 கொரிந் 15:51.

தேவனுடைய இந்த மாபெரும் எக்காள சத்தத்தின் கீழ் நாம் ஜீவித்து வருகிறோம். நம் தேவனுடைய நேரம் வந்திருக்கிறது என்றும், வருங்காலத்திற்காக அவர் ஏற்பாடு செய்திருக்கிற மகத்தான அமைப்பு தற்போது திறக்கப்படுகிறது என்றும் நம் இயல்பான காதுகளில் கேட்காமல், இவைகளை புரிந்துகொள்ளும் நம் காதுகளைக்கொண்டே நாம் கேட்கிறோம்.

அடுத்த தீர்க்கதரிசன காலப்பகுதி, உபத்திரவக் காலத்தைக் குறித்ததேயாகும். ஒருவகையில், இது கிபி 1872 காலப்பகுதியில் தொடங்கியிருக்கலாம். கம்யூனிசம் புதிதாகப் பேசத்தொடங்கின காலம் அது, பொதுஉடைமைவாதம் (Socialism) தன்னைத்தானே பரப்பத்தொடங்கின காலம் அது.

உண்மையில் பொது உடைமைவாதிகள் அல்லாத, ஆனால் சாதகமான சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகளின்கீழ் அப்படிப்பட்டவர்களாக ஆகக்கூடிய பலர் பொது உடைமைவாதிகள் என்று எண்ணப்படுகிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அது கிபி 1916க்கு முன் வளர்ச்சியடையும். பொதுஉடைமைவாதிகளின் இந்த வளர்ச்சி, அராஜகத்துடன் தொடர்புடையது பொதுஉடைமைவாதிகளின் நம்பிக்கைகளும், வழிமுறைகளும் தோல்வியடையும், பின்னர் அவை மகா உபத்திரவக் காலத்தைக் கொண்டுவருமளவுக்கு சீர்குலைக்கப்படும். இதற்கிடையில், தற்கால யுத்தத்துக்கான ஏற்பாடுகள் படிப்படியாக நடைபெற்று வருகின்றன.

தீர்க்கதரிசனத்தின் இந்த நிறைவேறுதல்கள் திடீரென்று வரவில்லை, மாறாக படிப்படியாகவே வரும், அது நிச்சயம் நிறைவேறும் என்ற கருத்தை நாம் வலியுறுத்துகிறோம்.

**மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல் படிப்படியாக நிகழும்**

மீதமிருக்கிற தீர்க்கதரிசன காலப்பகுதிகளும், இதற்கொப்பான நிறைவேறுதல்களையே பெற்றிருக்கும் என்று எதிர்பார்க்கும்படி இது நம்மை வழிநடத்துகின்றது. இதன்படி, புறஜாதியாரின் காலங்கள் முடிவுறுதல், ஒருவேளை செப்டம்பர் 20, 1914ஐ குறியிடக்கூடும். அப்படியிருக்குமானால் தேசங்களிடையே தற்போது நாம் பார்ப்பது, அவர்களின் முடிவுக்கான ஒரு மோதலாயிருக்கிறது, இதைத்தான் நாம் எதிர்பார்க்கவேண்டும். கர்த்தர் இந்த விஷயத்துக்குப் பின்னால் இருக்கிறார், கர்த்தருடைய இராஜ்யம் அதிகதிகமாக இதை வெளிப்படுத்தும். ஆயினும் உண்மைத் திருச்சபை தன் கர்த்தரோடு மகிமையடையும் வரைக்கும், அது முழுமையாக வெளிப்படுத்தாது. ‘‘நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடுகூட மகிமையில் வெளிப்படுவீர்கள்’’ – கொலோ 3: 4.

புறஜாதியாரின் காலங்கள் முடியும் அதே தருணத்தில், கர்த்தர் தம்மை வெளிப்படுத்துவார் என்று நாம் எதிர்பார்க்கலாமா ? கூடாது. அவர் ‘‘எரியும் அக்கினியில்’’ தம்மை வெளிப்படுத்துவார் என்று வேதாகமம் அறிவிக்கின்றது. புறஜாதியாரின் காலங்கள் முடிவுற்றபிறகு எவ்வளவு காலம் எரிகிற அக்கினியில் இந்த வெளிப்படுத்தல் இருக்கும் என நமக்குத் தெரியாது. இந்த மகா யுத்தத்தைத் தொடர்ந்து, முன்பு ஒருபோதும் நிகழ்ந்திராத மாபெரும் பூமி அதிர்ச்சி – அதாவது புரட்சி வரும் என்று தோன்றுகிறது. இது எல்லா நாகரீக தேசங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் (வெளிப் 16:18). பின்னர் பொது உடைமைக்கொள்கை தலைதூக்க நேரிட்டு, குறுகிய காலம் இருந்து பின்பு அராஜகமாக வளரும். புது இராஜ்யத்தை வெளிப்படுத்தும் ‘‘எரியும் அக்கினியாக’’ அந்த அராஜகம் இருந்து, உலகிற்கான ஆசீர்வாதம் அருளப்படும் முன்பு, அதன்மீது பழிவாங்கும் நீதியைக் கொண்டுவரும்.

‘‘அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால் ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை...’’ என்று நம் கர்த்தர் நமக்கு உரைத்திருக்கிறார்(மத் 24:22). அந்த தேசங்கள்மீது மோதி சுக்கு நூறாக்குவது, மேசியாவின் இராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருப்பதோடு மட்டுமல்லாமல், அராஜகம் தன் பணியை செய்துமுடித்தபிறகு அதை நிறுத்துவதும், மேலும் மனுக்குலத்துக்கு மனிதனால் உதவி ஒன்றும் செய்யமுடியாது என்ற உண்மையை மனித சிந்தைக்கு நிரூபித்திருக்கும்.

தற்காலத்தில் தேசங்கள் ஒன்றுக்கொன்று கசப்புணர்வை வெளிப்படுத்தி, ஒருவரையொருவர் ஜெயிக்கவும், அழிக்கவும் பேராவல் கொண்டு, தங்கள் சொத்து மற்றும் வீடுகளை ஒருவருக்கொருவர் அழிக்கநேரிடினும் யுத்தத்தைத் தொடர அவர்கள் தீர்மானமாயிருக்கிறார்கள். இவர்கள் தங்களை கிறிஸ்தவ தேசங்கள் என்று கூறிக்கொண்டாலும், கர்த்தருடைய ஆவியை அடைந்திருக்கவில்லை. சாந்தம், பெருந்தன்மை, சகிப்புத்தன்மை, சகோதரசிநேகம் மற்றும் அன்பின் ஆவியை, பரிசுத்தஆவியின் கனிகளை இன்னும் அடைந்திருக்கவில்லை ; அதற்கு நேரெதிரான வெறுப்பு, கோபம், சண்டை, கொலை போன்ற மாம்சத்தின் கிரியைகளை, சாத்தானின் கிரியைகளைக் கொண்டிருப்பதாக அப்.பவுல் கூறுகிறார். இதன் காரணமாகவே அவர்கள் தற்காலத்தில் கொந்தளிப்பில் ஈடுபட்டு, கோபமடைகிறார்கள்.

தேவ கோபம் வருவதற்காக இந்த தேசங்கள் காத்திருப்பதில்லை. ஏறத்தாழ இரு மாதங்கள் முன்கூட்டியே தங்கள்மீது அதை வருவித்துக்கொள்கிறார்கள். இந்த மகா உபத்திரவக் காலத்தில் அதன் நிறைவுவரை –‘‘அக்கினி’’வரை தேவ கோபம் தொடர்ந்திருக்கும்.

**அர்மகெதோன் யுத்தம்**

யுத்தம் தேசங்களை மிகவும் பலவீனப்படுத்தும். அதைத்தொடர்ந்து பொதுஉடைமைக் கோட்பாடுகளைக் கொண்டுவர முயற்சிகள் நடக்கும். ‘‘தற்போது இருக்கும் உலகம், தற்போதைய வானங்கள் அல்லது சபை அமைப்புகள், மேலும் பூமி மற்றும் சமுதாய ஒழுங்குமுறையாகிய தற்கால ஒழுங்குமுறைகளில் ஆர்வங்காட்டுகிற எல்லா வகுப்பினரும், அரசாங்கங்களும் இந்த பொதுஉடைமைக் கோட்பாடுகளை எதிர்கொள்ளநேரிடும் என்பது எங்கள் கருத்து. ஐஸ்வரியவான்களாலும், நிதியாளர்களாலும், அரசியல்வாதிகளாலும், தொழில் துறை பிரபுக்களாலும், சிம்மாசனங்களில் வீற்றிருக்கிற அதிபர்களாலும் தற்கால முறைமை ஆதரிக்கப்படும். தற்கால நிலைமைகளை பராமரிக்க தங்களால் முடிந்த எல்லாவற்றையும் இவர்கள் செய்து, தங்களுக்கு ஆதரவளிக்கும்படி மத குருமார்களிடம் அழைப்பு விடுப்பார்கள். பின்பு, ஒரு பொதுவான எழுச்சி எல்லா இடங்களிலும் வரும். ஒருபுறத்தில் தற்போதைய நிறுவனங்களினால் பயனடைவோர் எந்த மாற்றத்திற்கும் எதிராக இருப்பார்கள். மறுபுறத்தில் இவர்களுக்கு எதிராக, தங்கள் நிலைமையை மேம்படுத்த போராடும் திரளான ஜனங்கள் இருப்பார்கள். தேவ திட்டத்தின்படி மாற்றத்திற்கான காலம் வந்திருக்கிறது.

கர்த்தருடைய ஜனங்களுக்கு இந்தப் போராட்டத்தில் ஏதேனும் பங்கு இருக்குமா? இல்லை! நாம் சமாதானம் செய்வோர் என்பதை நாம் எப்பொழுதும் சிந்தையில் நிறுத்துவோமாக!நாம்சமாதானமாயிருந்து,எல்லா மனுஷரோடும் சமாதானத்துடன் ஜீவிக்க முயற்சிப்போராக இருப்பதோடு மட்டுமல்லாது,சமாதானத்தை ஊக்குவிப்போராக இருக்க வேண்டும்,காரியங்களை நேராகவும் சரியாகவும் பார்ப்பதற்கு பிறருக்கு உதவவேண்டும். இந்த நடைமுறையானது அராஜகம் மற்றும் சச்சரவுகளிலிருந்து நீக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கும்.ஆனால்அதற்கு நேர்மாறாக எல்லா முயற்சிகளையும் மீறி, அராஜகம் நிச்சயமாக வரும்.

ஆயினும் இப்போது வந்திருக்கிற புதிய ஒழுங்குமுறைமையின் தரப்பில், ஒரு வெற்றி இருக்கவேண்டும் என்பதை தம் வசனத்தின் மூலம் கர்த்தர் நமக்குக் காண்பிக்கிறார். பொதுஉடைமைவாதிகள் அராஜகத்தை விரும்புவதில்லை என்றாலும், அதிலிருந்து அவர்கள் வெகுதொலைவில் இல்லை. அராஜகம் மோசமான ஒன்றாக இருந்து, ஏதோ ஒரு வகையான அரசாங்கம் இல்லாதது, உலகம் அனுபவித்ததிலேயே மிக மோசமான விஷயமாயிருக்கும். இந்தப் போராட்டமே மாற்றத்தை ஊக்குவிக்கும் தேவ வழியாக இருக்கும், இது வேதாகமத்தில் மாபெரும் ''அக்கினி'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது தற்கால வானங்களை அல்லது ஆவிக்குரிய ஆளும் அதிகாரத்தையும், பூமியையும் அல்லது சமுதாய அமைப்புக்களையும் பட்சிக்கும்.

மாபெரும் ''அக்கினி''யைத் தொடர்ந்து, ''புதிய வானங்களும் புதிய பூமியும்'' வெளிப்படுத்தப்படும். இந்த புதிய வானங்கள், புதிய ஆவிக்குரிய ஆளும் அதிகாரம், வருங்காலத்தில் மகிமையிலுள்ள திருச்சபையாகவும், கிறிஸ்துவின் மணவாட்டியாகவும் அவரோடுகூட சிம்மாசனத்தில் அமர்த்தப்பட்டிருக்கும். பூமியின்மீது புதிய ஒழுங்குமுறையாக புதிய பூமி இருந்து, இதன் ஆளுகை முற்பிதாக்களின் கரங்களில் விடப்படும். அவருடைய இராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்படும்போது,''கர்த்தர் அவர்களை பூமியின் பிரபுக்களாக்குவார்''

**உமது இராஜ்யம் வருக**

''மரித்தோர் நியாயத்தீர்ப்படையும் காலம் வந்தது...'' என்று நம் திறவுகோல் வசனம் கூறுவது, அவர்கள் நீதியாக நடத்தப்பட்டு, முறையான வெகுமதிகளையும் தண்டனைகளையும் அடைவது, இந்த தேசங்கள் கோபிக்கும் நேரத்தோடு நெருக்கமான தொடர்புடையதாக இருக்கிறது. கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆளுகையின்போது, மரித்த முழு உலகமும் கையாளப்படுவார்கள். ''தீர்க்கதரிசிகளாகிய தம் ஊழியக்காரருக்கு'' வெகுமதி அளிப்பதே அந்த செயல்தொடர்பின் நோக்கமாக இருக்கும், இது ஏற்றவேளையில் துவங்கும். மேசியாவின் இராஜ்யத்தில் பூமியெங்கும் பூமிக்குரிய பிரபுக்களாக இருப்பதே அவர்களுடைய வெகுமதியாயிருக்கும், பரிசுத்தவான்களுக்கும் பலனளிக்கிறார்.''பரிசுத்தவான்கள் அதிகாலையில் முதலாம் உயிர்த்தெழுதலில் மாற்றப்பட்டிருப்பார்கள். ''உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கு பலனளிக்கிறதற்கும்'' என்று கூறப்பட்டிருப்பது, ஆயிரமாண்டு ஆட்சியின்போது கர்த்தரோடு இணக்கமாக வருபவர்கள் அனைவரும் அடையும் வெகுமதியைக் காண்பிக்கிறது. அதாவது, முழு மனுக்குலத்திற்கும் திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் வருவதை சித்திரமாக இது காண்பிக்கிறது. எல்லாவற்றிலும் அவருக்கு கீழ்ப்படிகின்றவர்கள் இந்த ஆசீர்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

முடிவு என்னவாக இருக்கும்? ''பூமியைக் கெடுத்தவர்களை கெடுக்கிறதே முடிவாக இருக்கும். ஆயிரமாண்டு ஆளுகையின்போது அழிவை ஏற்படுத்தும் செயல்களை செய்து, நீதியோடு இணக்கமாக மறுப்பவர்கள், ஜனங்கள் மத்தியிலிருந்து அழிக்கப்படுவார்கள். அவர்களில் ஒருவரும் மீந்திருக்கமாட்டார்கள். வேரும் கிளைகளுமாகிய தீமையான அனைத்தும் அழிக்கப்படும். நீதிமான்கள் மட்டுமே நித்தியத்துக்கும் நீடித்திருப்பார்கள். அநீதியுடன் இசைவில் இருக்கிற அனைவரும் அழிக்கப்படுவார்கள். ஆகவே நம் திறவுகோல் வசனத்தில் சுட்டிக் காட்டின வேலை நிறைவேற்றப்படுவதற்கு ஆயிரமாண்டு யுகம் முழுவதும் தேவைப்படும் என்று நாம் காண்கிறோம். அந்த வேலையானது திடீரென்று நிறைவேற்றப்பட நாம் எதிர்பார்க்கக்கூடாது, இது உடனடியாக நிறைவேற்றப்படாது.

**யூதர்களுடைய கேள்வி**

புறஜாதியாரின் காலங்கள் நிறைவேறித்தீரும்வரை எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும் என்று இயேசு கூறினதன் அர்த்தம் என்ன? யூதருடைய அரசியல், அரசாங்கம், அமைப்பு மற்றும் ஜனங்களை எருசலேம் குறிக்கிறது. நம் கர்த்தர் பேசின இவ்வார்த்தைகளுக்கு முன்பே, யூதர்கள் ஏற்கனவே பல நூற்றாண்டுகளாக மிதிக்கப்பட்டு வந்தனர். இயேசு அந்த வார்த்தைகளை உரைக்கிற நேரத்தில், ரோமானியர்களின் குதிகால் கீழ் இருந்தனர். புறஜாதியாரின் காலங்கள் நிறைவேறும்வரைக்கும் அந்த புறஜாதி அரசாங்கங்களின் ஆதிக்கத்தின்கீழ் தொடர்ந்து இருப்பார்கள்.

யூத ஜனம் 18 நூற்றாண்டுகளாக தங்கள் தாழ்த்தப்பட்ட நிலையிலிருந்து மீண்டு வருகிறார்கள். ''என் ஜனத்தை ஆற்றுங்கள் தேற்றுங்கள்; எருசலேமுடன் பட்சமாய்ப் பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்துதீர்ந்தது என்றும் அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்'' என்று ஏசாயா 40: 1,2ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, கர்த்தருடைய செய்தி அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது, இன்னும் வழங்கப்படுகிறது.

இந்த தீர்க்கதரிசனம் கிபி 1878ம் வருடத்தில் நிறைவேறினதை நாம் வேதாகமப் பாடங்களில் காண்பித்திருக்கிறோம். அதுமுதல் யூத நட்சத்திரம் உதயமாகிவருகிறது.

**உண்மை திருச்சபையின் எதிர்பார்ப்புக்கள்**

கிபி 1875இலிருந்து ஜீவிக்கிறவர்களின் ஆசீர்வாதம் – "1335 நாட்கள் வரை காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்" (தானி 12:12) என்ற அவருடைய தீர்க்கதரிசனம் எவ்வாறு நிறைவேறியுள்ளது என்பதை கவனியுங்கள். நாம் என்ன ஆசீர்வாதங்களை அடைந்திருக்கிறோம் ? வேதாகமம் நமக்கு சொன்னதுபோலவே அதுவும் நடந்திருக்கிறது. கர்த்தரிடத்தில் தங்கள் இருதயங்களை திறப்பவர்கள், அவர் உள்ளே வந்து, அவர்களோடு போஜனம் பண்ணுவதையும் மாத்திரம் காண்கிறவர்களாயிராமல், அவர்களுடைய ஊழியக்காரராக வந்திருந்து, அவர்களைத் தேற்றுவதோடு, "ஏற்றவேளையிலான போஜனத்தையும் அவர்களுக்கு அளிக்கிறதையும் காண்கிறார்கள். தற்கால சத்திய வெளிச்சத்துக்குள் நுழைந்ததிலிருந்து, ஆசீர்வதிக்கப்பட்ட சத்திய விருந்துகளால் நாம் போஷிக்கப்பட்டு வருகிறோம்.

நம் கர்த்தருடைய இரண்டாம் வந்திருத்தலில், அவர் "பழையதும் புதியதுமாகிய" சத்தியங்களை பரிமாறுவதாக கூறுகிறார். வரவிருக்கிற இராஜ்யத்தின் மகிமையைக் குறித்து நம் கவனத்துக்கு வருகிற புதிய காரியங்களையும், கிறிஸ்துவின் ஆயிர வருடஆளுகையின் முழு வேலையையும் மட்டுமல்ல, தெளிவான மற்றும் மேலான வெளிச்சத்தில் நமக்கு கொடுக்கப்படும் பழைய காரியங்களையும் நமக்கு கர்த்தர் அளிக்கிறார். அவைகளில் , விசுவாசத்தினால் நீதிமானாகும் போதனையும் ஒன்று, இதைக்குறித்து சகோ.லூதர் நூற்றாண்டுகளுக்கு முன் பிரசங்கித்திருந்தார், மேலும் இது சரியாக வரையறுக்கப்பட்டு, முழுமையாகப் புரிந்துகொள்ளப்பட்டதாக நாங்கள் நினைத்தோம். ஆனால் விசுவாசத்தினால் நீதிமானாகுதலைக் குறித்து சிறிதும் புரிந்துகொண்டிருக்கவில்லை என்பதை நாம் இப்போது காண்கிறோம். பரிசுத்தமாகுதலைக் குறித்து நல்ல மனிதர்களால் பிரசங்கிக்கப்பட்டது, பரிசுத்தமாகுதலின் பாடத்தைக் குறித்து வேதாகமம் கூறும் புரிந்துகொள்ளுதலை நாம் அடைந்தபொழுது, முன்பு நாம் அறிந்திருந்தவைகள் அனைத்தும் குழந்தைத்– தனமாகவும், எதிரானதாயும் காணப்பட்டது. இந்த போதனைகள் எத்தனை அழகாகவும் இணக்கமாகவும் மாறின ! லேவியராகமத்தில் கூறப்பட்ட அடையாளமான விஷயங்கள், தெய்வீகத்திட்டத்தின் மகிமைநிறைந்த அம்சங்கள் அனைத்தையும் சித்திரமாக காண்பிக்கின்றன. இந்த பரீட்சயமான பாடங்கள் அனைத்தும் இப்போது நமது குருவால் வெளிப்படுத்தப்பட்டு, புதியவைகளாக பிரகாசிக்கின்றன. அவரே புதியதும் பழையதுமான, ஏற்றவேளையிலான ஆகாரத்தை தந்து ஊழியம் செய்கிறார்.

இந்த எல்லா நூற்றாண்டுகளாக பிரசங்கிக்கப்பட்டு வருகிற ஞானஸ்நான போதனையை எடுத்துக்கொள்வோம். அதைக்குறித்து எதை அறியாதிருந்தோமோ, அது ஏராளமான தகவல்களைக் கொண்டுள்ளதை தற்போது கண்டுபிடித்துள்ளோம். ஞானஸ்நானம் என்ற பாடத்தைப் பற்றிய புரிதலுக்கு வரும்போது, அது அழகாகவும் பிரமாண்டமாகவும் இருக்கிறது ! இதற்கு இவ்வளவு அர்த்தம் இருப்பதை நாம் ஒருபோதும் நினைத்ததில்லை. இந்த எல்லா அறிவுப்பெருக்கத்துக்கான காரணம், தீர்க்கதரிசி தானியேல் கூறின, "1335 நாள்மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்"என்ற ஆசீர்வதிக்கப்பட்ட காலத்தில் நாம் ஜீவிக்கிறோம் என்பதேயாகும். மற்றுமொரு வார்த்தைகளில் கூறுவோமாகில், முன்னர் கூறியதுபோல், 1335 நாட்கள் கழிந்தபிறகு ஜீவிக்கிறவர்கள் பாக்கியவான்கள். தானியேல் தீர்க்கதரிசியால் குறிப்பிடப்பட்ட இந்த மகிழ்ச்சி, சமாதானம் மற்றும் ஆசீர்வாதங்களை, தேவன் நம் இருதயங்கள் மற்றும் சிந்தைகள் மீது பொழிந்தருளுகிற காலத்தில் நாம் ஜீவிக்கிறோம். ஆனால் இது ஒரு மணிநேரத்திலோ, ஒரு நாளிலோ அல்லது ஒரு வருடத்திலோ நிகழ்ந்துவிடவில்லை. தெய்வீக சத்தியம் மறைக்கப்படாமல் படிப்படியாக அளிக்கப்பட்டு வருகிறது. நீதிமான்களின் பாதை அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிறது.

**"புறாவைப்போல் கபடற்றவர்களாயும், சர்ப்பத்தைப்போல் வினவுள்ளவர்களாயும்"**

கடந்த காலத்தில், வேறுபட்ட தீர்க்கதரிசன காலப்பகுதிகள் அனைத்தும் முடிவடைந்ததை நாம் அனைவரும் ஒத்துக்கொள்கிறோம். அங்கே புதிய காரியங்கள் உடனடியாக வெடித்துவிடவில்லை. மாறாக புதிய நிலைமைகள் படிப்படியாகவே வந்தன என்பது தெளிவாகிறது. ஆயினும் தற்போது நாம் வாழ்கின்ற இக்காலத்தில், சிறிது வித்தியாசம் இருப்பதாகத் தெரிகிறது. உலகின்மீது வரும் மகா உபத்திரவக் காலத்தைப் பற்றிப் பேசும்போது, இந்த தற்காலத்தில் நடைபெறுகின்ற மாற்றங்களைப் பற்றி பார்க்கும்போது, இது திடீரென்று வருபவையாக, கர்த்தர் எல்லா இடங்களிலும் குறிப்பிடுகிறார்; "ஒருமணி நேரத்தில்" என்று அடிக்கடி அவர் வெளிப்படுத்துவது, நேரடி அர்த்தத்திலான ஒரு மணிநேரம் என அர்த்தப்படுத்தாமல், மிக குறுகிய காலப்பகுதியை குறிப்பிடுவதைக் காண்கிறோம். "ஒரு நாளில்" என்று குறிப்பிடுவது ஒரு குறிப்பிட்ட சிறிய காலப்பகுதியை சுட்டிக்காட்டுகிறது."கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார்" (ரோமர் 9:28). அதை நாம் நம்புகிறோம். "அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால் ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் நிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்"(மத் 24:22) என்று கூறின நம் குருவின் வார்த்தைகளை மீண்டும் நாம் நினைவுகூருகிறோம்.

**உண்மை திருச்சபையின் மீட்பைப்பற்றி..**

கர்ப்ப ஸ்திரீக்கு பிரசவ வேதனை வருவதுபோல், எந்த எச்சரிப்புமின்றி மாபெரும் மாற்றங்கள் உலகில் வரும். இந்த யுத்தம் (1914ல் துவங்கின முதலாம் உலகப்போர்) எவ்வித எச்சரிப்புமின்றி வந்தது, அந்த நேரம் வந்திருந்தபடியால், தேசங்கள் ஒன்றோடொன்று மிக விரைவாக போரிட்டன.

முன்பு இந்த விஷயங்கள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருந்து, தற்போது கர்த்தர் அவற்றை படிப்படியாக தளர்த்துகிறார்; நம் முழு மனுக்குலத்தையும் முற்றிலும் அழிக்கும் பெரும் அராஜகம் வரும்வரைக்கும் அவர் மேலும் மேலும் அவிழ்த்துவிடுவார். இதற்கிடையில் இராஜ்ய வகுப்பார் மகிமைப்படுத்தப்படுவார்கள், நம் இராஜா தம் மாபெரும் அதிகாரத்தை எடுப்பார். உலகம் அராஜகத்தின் அக்கினி வழியாக கடந்து சென்றவுடன், அந்த வெப்பத்தில் உலகின் தற்போதைய ஏற்பாடுகள் அகற்றப்பட்டவுடன், ஒரு கனப்பொழுதில் அல்ல, விரைவில் உலகம் விரைவில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட கிறிஸ்துவின் சரீரமாகிய சபையுடன்

மனுக்குலத்துக்கு ஆசீரையும் சமாதானத்தையும் கொண்டுவருவார். பின்பு உலகம் அழிக்கப்படக்கூடாது, மனுக்குலம் தன்னில்தானே அழிக்கப்படக்கூடாது என்று, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்பரிந்துபேசி விண்ணப்பம் செய்வார்கள், அதன்பின்பு, கிறிஸ்துவின்மூலம் அவருடைய பலியின் புண்ணியத்தால், தலையும் சரீரமுமாகிய மகிமையடைந்த கிறிஸ்து மூலம் எல்லா ஜனங்களுக்கும் ஆசீர்வாதம் வரத்துவங்கும்.

இவைகளை நாம் காணும்போது, இந்த மகிமையான பணிக்காக நம் வல்லமையைக்கொண்டு எல்லாவற்றையும் செய்து, நம்மை நாமே தயார்ப்படுத்துவதற்கு எல்லாக் காரணங்களும் உள்ளன என்பதை நாம் உணருகிறோம். நம் நேசமீட்பர் எதை செய்யச்சொன்னார் என்பதை நாம் நினைவுகூர்வோம்; “இவைகள் சம்பவிக்கத் துவங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றார்”–லூக்21:28. எவ்வளவு சீக்கிரம் என்று கர்த்தர் சொல்லவில்லை, எனவே நாமும் அதை சொல்ல முயற்சிக்க மாட்டோம்.

ஆனால் அடையவிருக்கும் நமது மாறுதலுக்கு, நாம் வெகுதொலைவில் இருக்கமுடியாது. ஆகவே இன்றைய தினமே திரையின் இப்புறமாக இருக்கும் கடைசி நாளாக இருப்பதுபோல் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் நாள்தோறும் ஜீவிக்கவேண்டும் என்று நாங்கள் புத்திமதி கூறுகிறோம், ஆகவே இன்றைய இரவோ அல்லது நாளைய தினமோ திரைக்கப்பால் மகிமைநிறைந்த காரியங்களுக்குள் நம்மை அழைத்துச்செல்லும். இந்த வழியில் ஜீவிப்பது, குறைந்தபட்சமாவது நல்ல அனுபவமாக நிச்சயம் இருந்து, ஆசீர்வாதங்களையும் முதிர்ந்த குண இலட்சணங்களையும் கொண்டுவரும். ஜீவிக்க எப்பேர்ப்பட்ட ஆசீர்வாதமான வழி! நம் மீட்பரைக் காண ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்து, அவருடைய அற்புதமான வேலையில் பங்குபெறுவது எப்பேர்ப்பட்ட ஆசீர்வாதமான வாழ்க்கை முறை! தற்காலத்தோடு தொடர்புடைய காரியங்கள் நமக்கு மிக குறைந்த முக்கியத்துவம் வாய்ந்தவை, அதனால்தான் தற்போதைய வாழ்க்கையில் தங்களால் முடிந்த அனைத்தையும் பெற வாழ்பவர்களால், நம் நாமங்கள் தீயவை என்று தூக்கி எறியப்படுகின்றன.

**நீங்கள் எல்லோரும் இதில் பருகுங்கள்**

நம் அழிவுக்குரிய சரீரங்களை என்ன செய்துவிடமுடியும் ? புது சிருஷ்டிகளாகிய நம்மை காயப்படுத்த ஒருவருக்கும் வல்லமை இல்லை. நாம் நமது மாறுதலுக்காக காத்திருக்கிறோம், அது சிலருக்கு ஒரு வழியிலும் மற்றவர்களுக்கு வேறு வழியிலும் வரும். தேவன் ஸ்தோத்தரிக்கப்படுவாராக! அவரது சித்தம் செய்யப்படும். நம் கர்த்தருடைய அனுபவங்களின் முடிவில் அவர் ஒரு பாத்திரத்தை பெற்றிருந்தார், குறிப்பாக அது கசப்பானதாயிருந்தது. தீமை செய்பவராக அதிலும் குறிப்பாக தேவதூஷணம் செய்தவராக குற்றம் சாட்டப்பட்டபோது, கடினமான துன்பத்தை அடைந்தார். யூத பிரமாணத்தின்படி, தேவ நாமத்தை தூஷிப்பது மிகவும் கொடூரமான குற்றமாக இருந்தது, இதற்கு அவமான மரணம் தண்டனையாக அளிக்கப்பட்டது. இயேசு தேவதூஷணம் செய்பவர் அல்ல, பரிசேயரும் சதுசேயருமே தேவதூஷணம் செய்தார்கள். ஆயினும் இயேசு ஒரு தேவ தூஷணக்காரராக மரிக்க நேர்ந்தது, ஆனால் அவரை மரணத்துக்கு ஒப்புவித்தவர்களே உண்மையாக தேவதூஷணம் செய்தனர்.

கிறிஸ்துவின் சரீரத்தின் பாத அங்கங்கள் சிலருக்கு, தெய்வீக ஏற்பாட்டின்படி, தேவன் அப்படிப்பட்ட கசப்பான பாத்திரத்தைக் கொடுக்க நேரிடுமானால், நாம் ஆச்சரியப்படக்கூடாது. தேவனிடமிருந்து நமக்கு ஏராளமான கிருபைகள் கிடைத்திருப்பதால், நாம் மற்றவர்களைக் காட்டிலும் இன்னும் கடுமையான சோதனைகளையும், முழுமையான மற்றும் இன்னும் அதிகமான கசப்பான பாத்திரத்தைப் பெற தகுதியானவர்கள் என்று தோன்றுகிறது.மேலும், அப்படியே இருக்கும் என்று வேத வசனங்கள் குறிப்பிடுவதாகக் காணப்படுகிறது.

உண்மை திருச்சபைக்கு முன்னடையாளமாயிருந்த எலியா எடுத்துக்கொள்ளப்படும்போது, அக்கினி ரதத்தில் சென்றதை நாம் நினைவில் கொள்கிறோம். நாம் எடுத்துக்கொள்ளப்படும் நேரம் வரும்பொழுது, இது சபையின்மீது வரும் உபத்திரவக் காலத்தை அடையாளமாகக் குறிப்பிடுவதை நாங்கள் நம்புகிறோம். பிறகு வந்த யோவான் ஸ்நானகன், எலியாவுக்கு பாதி நிஜமாகவும், பாதி முன்னடையாளமாகவும் இருந்தார். யோவான் ஸ்நானகனது அனுபவங்கள் மிகவும் கசப்பானவை. அவர் சிறிதுகாலம் சிறைச்சாலையில் இருந்தபோது, எந்த பிரசங்கமும் செய்ய அனுமதிக்கப்படவில்லை. அவர் சிறையிலிருந்தவேளையில், மேசியாவைக் குறித்த தம் மகிமை நிறைந்த எதிர்பார்ப்புகள் தவறானதா, இல்லையா என்று அவர் வியப்படைந்ததில் எந்த ஐயமும் இல்லை. அப்போது அவர் சிரச்சேதம் பண்ணப்படவேண்டும் என்று திடீர் உத்தரவு வந்தது. ஏரோதியாளும் சலோமியும் அவரை அழிப்பதில் ஆவலோடு இருந்தனர், ஆனால் ஏரோதுவுக்கோ மனதில்லை. இந்த அடையாளத்தில், ராஜா சமுதாய அதிகாரத்தையும், ஏரோதியாள் ரோமன் கத்தோலிக்க சபையையும், மகள் சலோமி புராட்டஸ்ட்டன்ட் சபைகளின் கூட்டமைப்பையும் குறிப்பிடுவதாக நாங்கள் எங்கள் விளக்கத்தில் கூறியதை நினைவில்கொள்வோம். இவைகள் குறிப்பாக, “தாயாகிய” சமுதாய அதிகாரத்தோடு ஓரளவு ஐக்கியப்பட்டிருக்கின்றன. ராஜாவின் முன்பாக சலோமி விசேஷ நடனம் ஆடினதையும், அவளது நடனத்தில் மகிழ்ந்து, அவள் விரும்பின எதையும் பெற்றுக்கொள்ளலாம் , அவரது ராஜ்யத்தில் பாதியை வேண்டுமானாலும் தருவதாக ராஜா அவளிடத்தில் கூறினார். தன் தாயிடம் ஆலோசனை செய்தபிறகு, யோவான் ஸ்நானகனுடைய மரணமே தங்களுக்கு நடக்கக்கூடிய சிறந்த விஷயம் என்று அவர்கள் தீர்மானித்தனர்.

நம் குருவின் விஷயத்திலும் அவ்வாறே நடந்தது. அவர் அழியவேண்டும் என்பதே சிறந்த காரியம் என மத ஆட்சியாளர்கள் முடிவுசெய்தனர். யூத தேசத்தின் கடைசி பிரதான ஆசாரியராயிருந்த காய்பா : முழு தேசமும் அழிவதைக் காட்டிலும், ஜனங்களுக்காக ஒரு மனிதன் மரிப்பது நலம் என்று இயேசுவைக் குறித்து தீர்க்கதரிசனம் கூறியதை நாம் நினைவுகூருகிறோம். யோவான் ஸ்நானகனுடைய விஷயத்திலும் அப்படியே நடந்தது. யோவான் ஸ்நானகன் மரிக்கவேண்டும் என்றும், இதனால் அவர்களுடைய தவறான போக்கை அவர் தொடர்ந்து நினைப்பூட்டுவது நிறுத்தப்படும் என்றும் ஏரோதியாளும் சலோமியும் முடிவுசெய்து, அவர் சிரச்சேதம் பண்ணப்படவேண்டும் என்றனர்.

நாம் பார்க்கப்பட மீதமிருக்கிற நிஜத்தின் ஒருபகுதியாக இது இருக்கிறது.நாங்கள் சாதகமாகப் பேசுகிறதில்லை, மாறாக, நாம் சர்ப்பங்களைப்போல ஞானமுள்ளவர்களாயிருக்க

விரும்புகிறோம். கர்த்தர் வர அனுமதிக்கும் காரியங்கள் எதுவாயிருந்தாலும் நாம் ஆச்சரியப்படக்கூடாது. கர்த்தருடைய இறுதிவேளைகளில், அவருக்கு கசப்பான துன்பத்தின் பாத்திரம் கொடுக்கப்பட்டதையும், பிதா அதை அவரிடமிருந்து விலக்காதிருந்ததையும் நினைவில் கொள்வோம். ஆனால் இயேசுவோ அதை சாந்தத்தோடு ஏற்றுக்கொண்டு; "என் பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ ? " என்று கூறினார். ஆகவே கர்த்தர் நமக்கென வைத்திருக்கும் கசப்பான அனுபவங்கள் மற்றும் அவமானத்தின் பாத்திரம் எதுவாயிருப்பினும் அதற்கு நம்மை நன்கு ஆயத்தப்படுத்தவேண்டும். அதே சமயத்தில், நாம் தாங்கிக்கொள்வதற்கும் மேலாக சோதிக்கப்படும்படியோ, அல்லது பரீட்சிக்கும்படியோ கர்த்தர் நமக்கு அனுமதிக்கமாட்டார், ஆனால் அந்த சோதனையிலிருந்து தப்பிக்கும் போக்கையும் ஏற்படுத்துவார் என்று, வேத வசனங்களில் உள்ள வாக்குத்தத்தம் புத்துணர்ச்சியளிக்கும் கருத்தை நமக்கு அளித்துள்ளதை நம் சிந்தைகளில் பெற்றிருக்கவேண்டும். "அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்"– ரோமர் **8:28.**

**ஊக்கமளிக்கும் வார்த்தைகள்**

ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக, மணவாட்டியாவதற்கான அழைப்பை, உலகிலிருந்து வெளியே வரும்படியான, உலகிற்கு மரிக்கும்படியான, அவரிடத்தில் நம் சித்தங்களை கொடுப்பதற்கான, நம் பூமிக்குரிய பொக்கிஷங்களை பலிசெலுத்தும்படியான அழைப்பை நாம் கேட்டிருக்கிறோமா ? நாம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்களாகியிருக்கிறோமா ? "ஒருவன் என் சீஷனாக இருக்க விரும்பினால் தன்னைத்தான் வெறுத்து (தன் சொந்த சுயசித்தத்தை விட்டுவிட்டு), தன் சிலுவையை எடுத்து, என்னைப் பின்பற்றக்கடவன்". நாம் குருவை பின்பற்றுகிறோமா ?நாம் தொடர்ந்து அவரை பின்பற்றுவோமா ? ஆம்! என்று நம் இருதயங்களில் சொல்லவேண்டும்.

தற்போது அவரைப் பின்பற்றுகிறவர்கள், மறுபிறப்பில் கர்த்தருடைய சொந்த சரீரத்தைப்போல மகிமை நிறைந்த சரீரங்களைப் பெறுவார்கள். "அவர் இருக்கிற வண்ணமாக அவரைத் தரிசிப்பதினால் அவருக்கொப்பாய் இருப்போம்" அவருடைய மகிமையில் பங்குபெறுவோம். அது நம் எல்லாருடைய பங்காக இருக்கட்டும்! அவருடைய திருச்சபைக்காக, முதலாவதாக அந்த திருச்சபையின் மாபெரும் தலையாகிய நம் கர்த்தராகிய இயேசுவுக்கும், பின்பு அவரோடு அவருடைய இராஜ்யத்தில் உடன்சுதந்திரராகும்படி நாடுகின்ற அவரது தாழ்மையுள்ள பின்னடியார்களாகிய நமக்காகவும், தேவன் ஏற்பாடு செய்திருக்கிற மகிமை நிறைந்த காரியங்களில் நாம் ஒன்றிணைந்து சந்தோஷப்படுவோமாக.

அறிவு மட்டுமே நம்மை பரிசுத்தமாக்காது என்பதை நாம் நினைவில் கொள்வோம். பரிசுத்த பேதுரு நமக்கு கூறுகிறபடி, மாம்சத்தின் சுயசித்தத்தை நாம் அழித்து, நம் கர்த்தரின் ஆவியை அதிகதிகமாக அபிவிருத்தி செய்து, நாம் நிபந்தனைகளுக்கு இணங்கும்போது மட்டுமே, ஆவியில் பரிசுத்தப்படுத்துவதற்கு அறிவு மதிப்புமிக்கதாக இருக்கும். தீமை, வெறுப்பு, கோபம், சச்சரவு போன்ற அனைத்தையும் நாம் களைந்துபோட்டு மகிழ்ச்சி, சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், சகோதரசிநேகம் மற்றும் அன்பை அணிந்துகொள்ளுங்கள் என்றும் நாம் அறிவுறுத்தப்படுகிறோம். "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது... இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்"– **2**பேது **1:5–11.** அந்த இராஜ்யத்தில் பங்குபெறுவதையே நம் இலட்சியமாகவும் குறிக்கோளாகவும் கொண்டிருப்போமாக!

**யார் நிலைநிற்பார் ?**

நாம் பரீட்சையின் வேளையில் இருக்கிறோம் என்பதை நினைவில் கொள்வோம். நம் கர்த்தரின் மரணம் மற்றும் பெந்தெகொஸ்தே நாளுக்கு இடைப்பட்ட காலத்தில் அப்போஸ்தலர்களும் இதற்கொத்த நிலையைப் பெற்றிருந்தார்கள். நம் கர்த்தரின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அவருடைய சீஷர்களுக்கு ஒரு சிலதடவைகள் அவர் தோற்றமளித்த பிறகு, பல நாட்கள் அவர்கள் அவரைக் காணவில்லை. பின்பு அவர்கள் சோர்வுற்று, "காத்திருப்பதில் எந்த பயனுமில்லை" ;"நான் மீன்பிடிக்கப் போகிறேன்" என்று ஒரு சீஷர் கூறினர், மற்ற இருவரோ, "நாங்களும் உன்னோடு வருகிறோம்" என்றனர். அவர்கள் மனுஷரைப் பிடிக்கும் வேலையைவிட்டுவிட்டு, மீன்பிடிக்கும் தொழிலுக்கு செல்ல தயாராயிருந்தனர். சீஷர்களுக்கு இது ஒரு பரீட்சையின் வேளையாக இருந்தது. அவ்வாறான பரீட்சையே இன்றைக்கு நமக்கும் உள்ளது. அவ்வாறு இருக்குமானால், அதை விட்டுவிடுவதற்கு இப்போதே ஒரு நல்ல நேரம். யாருக்காவது, கர்த்தரையும் அவரது சத்தியத்தையும் விட்டுவிட்டு அவர் நிமித்தமாக பலிசெலுத்துவதை நிறுத்தும்படி நடத்தப்பட எந்தக் காரணமும் இருக்குமானால், அது அவர்களுடைய இருதயத்திலுள்ள தேவ அன்பு அல்ல, வேறு ஏதோ ஒன்றுதான் கர்த்தர்மீது ஆர்வத்தைத் தூண்டுகிறது; ஒரு வேளை நேரம் குறைவாயிருப்பதாக நம்புவது; பிரதிஷ்டையின் அர்ப்பணிப்பு ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே.

ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் இயேசு தம் சீஷர்களிடம்; "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களா ?" என்று கேட்டபொழுது இருந்த நிலையே இப்போதும் இருக்கலாம். "கர்த்தாவே, யாரிடத்தில் நாங்கள் போவோம் ? நித்திய ஜீவனளிக்கும் வார்த்தைகள் உம்மிடத்தில் உண்டே" என்பதே அதற்கு பதிலாக இருந்தது. கர்த்தருடைய பந்தியைத் தவிர வேறு எந்தப் பந்திக்கு சென்றாலும், நாம் ஆவிக்குரிய ரீதியில் பட்டினி கிடப்போம். வேறு எங்கு செல்வது என்று நமக்குத் தெரியாது. கர்த்தருடைய பந்தியிலேயே நாம் தங்கியிருப்போம். சத்தியம் மற்றும் ஜீவனுக்கான செய்தியால் அவர் நமக்கு போஷாக்களித்து வருகிறார். சத்தியத்தின் மீது பசி தாகம் உள்ளவர்களுக்கு தேவையான எல்லாவற்றையும் அவர் மேஜையின்மீது வைத்திருப்பார் என்று நாங்கள் நம்புகிறோம். நமக்குத் தேவையான ஒவ்வொரு பாடத்துக்குமான சத்தியத்தை வெளிப்படுத்த கர்த்தர் விரும்புவதால், நமக்கு கொடுக்கப்படும். ஏனெனில் "அவர்கள் திருப்தியடைவார்கள்" என்று அவர் வாக்களித்திருக்கிறார்.

––––––